உ

குமரன் துணை

விவே பா நு.

ஒரு மாதாந்தத் த ழ்ப் பத்திரிகை.

ஆம் 4 } 1905 எப்பிரல்மீ { புத்தகம் 4

வி ப்பற்றிய அ ப்பிராயம்.

சென் ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகா
ரை சாமிநாதையர் அவர்கள் எழுதியது.

உ சென்னப்பட்டணம்.

27—3—1905.

ப்பிராயம்.

க பரம்பரைத் தமிழ் வித்துவானு
கந்தசாமிக்கவிராயரவர்கள் மிக்க
க மதுரை மாநகரில் வெளிப்படு
பத்திரிகையை ஒவ்வொரு மாத
ண்டு.

வ்வச்சமயங்களில் எழுதப்படும்
சரித்திரச் சுருக்கங்கள், பலவ
மதசம்பந்தமான விஷயங்கள்,
ந்த குணக் குறிப்புக்கள், விசே
முதலியவற்றுள் ஒவ்வொன்
விளங்க எழுதப்படுதலின், படிக்
வத்துவிட்டு வேறொன்றைப் பார்க்க
ல விஷயங்களையும் புலப்

படுத்திப் படிப்பவர்களுடைய அறிவைப் பரவச் செய்த
விவேகபாநு என்னும் பெயர் பத்திரிகைக்குத் தக்கதெ
தோற்றுகிறது.

இப்பத்திரிகை திர்ப்திக கஇருக்கிறதென்று சில வி
கிகள் சொல்லவும் கேட்டிருக்கிறேன்.

இதுபோன்ற பத்திரிகை காலத்தில் தமிழில் ந
பெற்றுப் பற்பல ஊர்களிலும் ண்டுவது ஆவ
மாதலாலும் இதற்கு வருடம் ஒன் போது ஏற்ப
டுள்ள சந்தாத்தொ இதன் செல கும்பொரு
சிறிதாகவே யிருத்தலாலும் இந் நாட்டி
முள்ள கனவான்கள் தக்க பொரு தரிப்
ளாயின் இப்பத்திராதிபர்களாகிய ஏள்
நாதையர் அவர்களுக்கும், மகா-ா க
கவிராயரவர்களுக்கும் மனக்கவலை
யுண்டுபண்ணு மென்றும், எது
வேறுத இக்காலத்தில் இப்பத்தி
ந்து இன்னும் மிக்க பயனையளிக்

—

லார்ட் கர்ஸனு

வங்காள சர்வகலாசாலை கா
லார்ட் கர்ஸனவர்கள் சான்ஸல
ருக்குப்புத்திகூறியதில் இந்திய
றைகூறிப்பேசினர். இப்பழிச்
புகுந்ததுபோலவேயிருந்தது.
இதைப்பற்றிக் கண்டித்துப்பே
இராஜபிரதி செய்ததுபெருந்த
த்து முறையிட்டார்கள், இதில்

களைக் கூறியதாகவே நினைத்துத் தங்கள் அனுதாபத்தையும் காட்டினர். உலகவியாபாரத்திற் புகக்கருதிய ஒருவனுக்கு நம் நாட்டில் நம் குரு செய்யும்முதல் உபதேசம் "சத்தியம்வத," அதாவது உண்மை பேசுஎன்பதே. வேறு எந்தநாட்டில் இவ்வாறான உபதேசம் செய்யப்பட்டுவருகிறதோ அறிகிலேம், "பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்று கூறுவதும் நம் நாடே. சத்தியத்தைக்காப்பாற்றும்பொருட்டு நாடுநகரங்களையும் கோட்டை கொத்தளங்களையும் மனைவிமக்களையும் உற்றார்பெற்றாரையும் துறந்து சண்டாளனுக்கும் அடிமைபூண்டு சுடலைகாத்தசரித்திரம் வேறு எவ்வூரிலுண்டு? உலகசரித்திரத்தை நன்கு ஆராய்ந்தவர்களுக்கு நம் நாட்டு மகிமை நன்கு விளங்கும். இக்கலிகால ததும் கோடிக்கணக்கான ஜனங்கள் இன்னும் அதைப் பொன் போல் போற்றி வருகின்றதைக் கிராமங்களில் போய்பார்த்தால் தெரியவரும். ஐரோப்பிய நாடுகளையும் நம் நாட்டையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கி நோக்குங்கால் நம் நாட்டின் உயர்வும் அவைகளின் தாழ்வும் நன்கு புலப்படும். கபடமும் மோசமும் நிறைந்த ஐரோப்பிய நாட்டைப் போல நம் நாட்டையும் நினைத்துக் குறைகூறலாமா? எச்சாதி யாரிலும் யோக்கியர் அயோக்கியர்என்று இரண்டு பகுப்பாருண்டு. அவ்வாறிருக்க நம் நாட்டாரை இவ்வாறு பழிகூறியது நம் லார்ட்கர்ஸன் அவர்களது அந்தஸ்துக்கும் புத்திகூர்மைக்கும் சாதுர்யத்துக்கும் சிறிதும் ஒவ்வாதகாரியமே. அவர்கள் அதுவிஷயமாய் பின் எவ்வளவு அநுதாபங் காட்டிப் பேசினாலும் அப்பழி அவரை விட்டு எளிதில் நீங்காது.

இப்பழியைக்காட்டிலும் நம் புத்திமான்களுக்கு வேறு யாது பழிவேண்டும். இனியாவது நம் இராஜப்பிரதிநிதியவர்கள் இவ்வாறு வாய்பதறி வார்த்தைகள் பேசாமல் தாம் ஆளும் ஜனங்களை மதித்து அவர்கள் நற்குணங்களைப் பலரறியத் தூற்றுவாராக.

"பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமல் நோற்பதொன் றுண்டு—பிறர் பிறர்

சிரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார் யார்க்குந் தாழ்ச்சி சொலல்."

என்ற பெரியோர் கூற்றைக் கொண்டு ஒழுகின் நலமாம். இனியாவது அவர்கள் தாமுள்ளவரை நம் நாட்டுக்கு ஸ்திர மான நன்மைகளைப்புரிந்து இப்பழியை ஜனங்கள் மறக்கும் வண்ணம் செய்வார்களாக.

பத்திராதிபர்.

தேக ஆரோக்ய சாஸ்திரம்.

இப்பெயர்கொண்ட நூலைத் திரிசிரபுரம் நாஷனல் ஹைஸ்கூல் உபாத்தியாயரும் மானேஜருமான மகா-ள-ள-ஸ்ரீ பி. ஜி. சுந்தர சாஸ்திரி அவர்கள் பீ. ஏ. ஆங்கிலத்தில் எழுதி அச்சியற்றியிருக் கின்றனர். இது முக்கியமாய் ஹைஸ்கூலில் வாசிக்கும் மாணு க்கருக்கு உபயோகமாகும் பொருட்டு எழுதப்பட்டிருப்பினும் தேக ஆரோக்கியத்தைப் பேண விரும்புகிற ஒவ்வொருவருக் கும் மிக்க உபயோகமானது. சாஸ்திரியார் தாம் பல்லாண்டு களாய் ஆசாரிய முறையில் மாணுக்கரிடம் பழகுங்கால் கூர்ந்து கவனித்த பல துர் வழக்கங்களைக் களைந்தெறியும் படியான நோக்கத்துடன் இந்நூல் எழுதப்பட்டதாகத் தோற்றுகிறது. ஒவ்வொரு விஷயமும் தெளிவாகவும் கீழ் நாட்டு மேனாட்டுச் சாஸ்திர விதிகளுக்கு ஒத்ததாகவும் விளக்கிக் காட்டப்பட்டிருப் பதுடன் சாதுரியமாகவும் கூறப்பட்டிருக்கின்றது. டெமி 91 பக்கங்கள் கொண்ட இந்நூல் எவர் கையிலும் இருப்பது இன் றியமையாதது. விலையும் 6 அணுவே. உயர்ந்த நூல் கருத்துக் களைத் தழுவியே விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. நம் தமிழ்நாட்டாருக்கு உபயோகமாகும் வண்ணம் இவ்வரிய நூலைத் தமிழில் மொழிபெயர்க்கச் சாஸ்திரியார் உடனே ஏற்பாடு செய் வார்களென்று நம்புகிறோம். சுசி, ஆகாரம், நித்திரை என்ற முக் கிய விஷயங்கள் மிகவும் அழகாய் எழுதப்பட்டிருக்கின்றன. கலாசாலை மாணுக்கரும் ஆசிரியரும் இந்நூலை வாங்கி வாசிக்கின் பயனடைவார்களென்பது திண்ணம். பத்திராதிபர்.

ஜகத்ஜோதி.

[முன் தொடர்ச்சி]

மகா வீர தீரனை ஷியர்ஆப்கான் சத்துருக்களால் திடீரென்று சூழப்பட்டுத் தான் இனித்தப்பிக்க வழியில்லை யென்று அறிந்து தெய்வ வழிபாடு செய்ததாகக் கூறினேம். அச்சமயத்தில் குண்டுமேல் குண்டு வந்து பாய்ந்து கொண்டிருந்தது. சிறிதும் லட்சியமின்றி எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு அசைவற்று நின்றான். அவ்வீரனுக்கு ஆறுகுண்டுகள்பட்டவுடனே சிறிதும் ஆயாசமின்றி அவன் ஆவி கூட்டைவிட்டுப் போகத் தொடங்கிற்று. பகவத்தியானத்தைத் தவிர்த்து அவன் நிர்மலமான மனம் வேறெதையும் நினைக்கவில்லை. அதனால் அவனிடம் மரணத்துன்பக்குறி யாதொன்றும் புலப்படவில்லை. மரண சமயத்தில் மகான்களுக்கன்றி மனநிலைமை யாதொரு சஞ்சலமின்றி யிருத்தல் அரிது.

"எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலினு லாங்கமல நீர்போல்
பிரிந்திருப்பார்..............."

ஆகையால் அவன் சிறிதும் தேகத்தில் பற்று வைக்கவில்லை. இவ்வுலகப்பற்றுக்களாகிய மண், பெண், பொன் என்ற ஈஷணைத்திரயத்தில் நெடு நாள் பழகிய மனம் அப்பற்றை விடுவதென்றால் எல்லோருக்கும் சுலபமாய் லபிக்குமா? "அற்றது பற்றெனினன்றே உற்றதாகும் வீடு."

மகமது கஜனி தான் இந்தியாவினின்றும் கொள்ளையடித்துப் பல ஒட்டகைகள் மீது ஏற்றிக்கொண்டுபோன ஏராளமான நவரத்நங்கள் மோகராக்கள் முதலிய பல வகைப்பொருள்களையும் பொற்றட்டுக்களில் பரப்பிச் சாகும்தருணத்தில் தன் கண்ணெதிரே கொணரச்செய்து "ஐயோ இவ்வளவுசம்பத்தையும் விட்டுப்பிரியவேண்டி யிருக்கிறதே யென்று" நா குழற மனமுருகக் கண்கள் நீர் துளிக்க ஏக்கங்கொண்டு பிராணனை

விட்டசங்கதி யறியாதாரு முளரோ'' அவ்விதம் ந...
ஆப்கன் இச்செல்வங்களுக்கெல்லாம் மேலான செல்வ...
விளங்கின தன் இன்னுயிர்ஜகத்ஜோதியைச் சிறிதாவது நி...
துப்புலம்பினதுண்டோ? இல்லை. எனையாளுமீசன் செயல்படி
யே எல்லாம் நடக்குமென்பது அவன் துணிபாகையால் அவன்
முந்நீர்த்திரையின் எழுந்தியங்காமேதையாய்ச் சிறிதும் சஞ்
சலமின்றி உயிர் நீத்தனன். சாதலிலும் வீரத்தன்மை விளங்கி
வீரசொர்க்கமடைந்தனன். வீரசரித்திரங்கள் இவ்வுலகில் உலா
வும்வரை இவ்வரிய வீரனது பேரும் புகழும் நிலைநிற்குமென்
பதிற் சிறிதுமையமில்லை.

கொலைபாதகர்கள் இச்சந்தோஷச்செய்தியைச் சக்கரவர்த்
திக்குத் தெரியப்படுத்தி ஆனந்தமடைந்தனர். சக்கரவர்த்தியா
கிய சிலீமும் அகத்தில் ஆனந்தமும் முகத்தில் துக்கமும் உடை
யவர்போல் நடித்தான். நெடுநாளாய்த் தான் கருதியிருந்த காரி
யத்தை இனித் தடையின்றி முடிக்கலாமென்று அவன் மனம
ஆனந்தமடைந்தது. உடனே ஜகத்ஜோதியைக்கொணர ஏற்பாடு
செய்தான். அவளும் இடிகேட்ட நாகம்போல ஏங்கித் துயரக்
கடலிலாழ்ந்தினள். சக்கரவர்த்தியும் அவள் அகந்தையையும்
அலட்சிய குணத்தையும் தண்டிக்கக் கருதி அரண்மனையைச்
சார்ந்த ஓர் இருட்டறையில் பைங்கிளியைப் பஞ்சரத்திலடைக்
கும் வண்ணம் அவளை அடைத்து வைத்தனன். அவ்வரண்மனை
யைச்சுற்றி நெடுந்தூரம் உத்தியான வனங்களும் தடாகங்களும்
அமைக்கப்பட்டிருந்தன. அச்சிங்காரத் தோட்டங்களிலகப்ப
டாத வஸ்து கிடையாது. ஆங்காங்கு லதாக் கிரகங்கள் ரம்
மியமாய் அமைக்கப்பட்டிருந்தன. சலவைக் கற்களால் ஆங்
காங்கு அழகான மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. அத்
தோட்டத்தின் நடுவில் சிற்றாறுகள் சலசலத்து ஓடிக்கொண்
டிருக்கும். பல படித்துறைகள் வாய்ந்த வாவிகளும் தடாகங்
களும் அமைக்கப்பட்டிருந்தன. அவைகளிற் செங்கழுநீர்ப்
புஷ்பங்களும் நீலோற்பலங்களும் ரம்மியமாய் விளங்கின. செய்
குன்றுகள் பல ஆங்காங்கு விளங்கும். வரிசை வரிசையாய்க்

கமுகுமரங்கள் வழியின் இருபுறங்களிலும் அமைந்து அழகுக்கு அழகு செய்தவிதம் நிழலுள் நிழலைத் தந்தன. அத்தோட்டத் தின்மத்தியில்ஒரு சிறந்த பெரிய ஆலமரமிருந்தது. அது நாலா புறமும் தன் கிளைகளைப் பரப்பிக்கொண்டு விதானம்போற் கவிந்திருந்தது. முதியோர்களைத் தாங்கும் இளைஞர்களைப்போல் பலவிழுதுகள் அதன் விசாலமான கிளைகளினின்றும் கீழிறங்கிப் பூமியில் வேரூன்றியிருந்தன. அவைகள் தூரப்பார்வைக்கு அம்மரத்தின் கிளைகளைத்தாங்கும் பல ஸ்தம்பங்கள்போல் தோன்றின. தாய்மரமின்னது என்று கண்டுபிடிக்கமுடியாத வண்ணம் விழுதுகள் இருநிலம் பிளக்க வேர் வீழ்த்துத் தாய் மரத்தைத் தழுவி மறைத்துநின்றன. அன்புடன் அணைத்துத் தழுவி வளர்த்த அன்னையைத் தளர்ச்சியுற்றகாலத்து அருளுடன் அணைத்துச் சிறிதும் துன்புறுவண்ணம் தாங்கிநிற்கும் அருமக்களைப்போல் அவ்வாலமரம் பல விழுதுகளால் தளராவண்ணம் போற்றப்பட்டு நின்றது.

"தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன்சினையினும்
நுண்ணிதேயாயினும் அண்ணல்யானை
யணிதேர்புரவி யாட்பெரும்படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே."

என்று பெரியோர் கூறியது இம்மரத்தைக் குறித்துத் தானோவென்று சந்தேகிக்கக்கூடியதாயிருந்தது. சிற்சில [illegible]களில் ஒரே கிளையைப் பலவிழுதுகள் வரிசையா[illegible] தாங்கிக்கொண் டிருப்பதை நோக்கின் மணப்ப[illegible] விட்டத்தைப் பல கால்கள் தாங்கி நிற்பதுபோல் [illegible] [illegible]லவிடங்களில் கொடிக்கயிறுபோல் மெல்லிய ச[illegible] [illegible] பூமியில் இறங்கி நிற்கும் அழகைக்கண்ணு[illegible] [illegible] உயரத்தை அளப்பதற்கு ஏற்பட்ட [illegible] [illegible]ல் தோற்றும். அவ்வழகிய மரத்தின் பற்ப[illegible] [illegible]வும் ஊசலாடுங் கயிறுகள் தொங்கும். சிறு[illegible] [illegible]களில் விழுதுகளையே பின்னிப்பிணைத்து ஊசல[illegible]

பார்கள். அவைகளில் உட்கார்ந்து ராஜகன்னிகைகள் பொழுது போக்குக்காக வீசியாடி விளையாடுவார்கள். மான்கன்றுகள் அம்மரத்தின் நிழலில் தளதளவென்று இருக்கும் அறுகம்புற் கொழுந்தைக் கறித்துக்கொண்டு மருண்ட பார்வையுடன் படுத்திளைப்பாறும். பறவையினங்கள் அதன் உன்னத கொம்புகளில் துஷ்டராகிய மனிதர்கள் சிதைக்காவண்ணம் கூடுகட்டிக் குஞ்சு பொரித்துச் சுகமாய் வாழும். அதன் மரகத இலைகளும் அவற்றிற்கிடையில் தோன்றும் அதன் பவள நிறம் வாய்ந்த பழங்களும் மிக ரம்மியமாய்த் தோன்றின.

சூரியன் அதன் குளிர்ந்த நிழலில் சிறிதுநேரமாவது படுத்துறங்கப் பார்த்தும் முடியாததால் அதன் உச்சியில்தங்கிநின்றுபோவது வழக்கம். அக்காலத்தில்அவன் ஒற்றைத்தனியாழித் தேரிற்பூட்டிய பச்சைக்குதிரைகளும் சிறிது இளைப்பாறி அதன் பைந்தளிர்களைச் சிலிது கறித்துச்செல்லும். அதன்குளிர்ச்சியை நோக்கியன்றோ நித்திரா சுகமறிந்த மகா விஷ்ணுவும் அதன் இலையில் பள்ளிகொண்டார். தக்ஷணாமூர்த்தி பகவானும் அம்மரத்தடியிலமர்ந்து சீஷர்களுக்கு உபதேசம்செய்தனர். ஆயிரம் பணமகுடமுடைய ஆதிசேஷனுக்கும் அம்மரத்தைப் போன்ற அடைக்கல ஸ்தானம் இவ்வுலகில் கிடைப்பது அரிது. அம்
...ின் நிழலில் நாம் உலாவின் நம் மூளையும் தெளிவுற்றுக்
...றும். அதனாலன்றோ நம் கிராம பஞ்சாயத்தார்கள்
...யிற் கூடி வழக்குக்களைத் தீர்க்கின்றனர். ரிஷிகள்
...ய யோகத்துக்கு யோக்கியமென்று தேடிச்செ
...ம். இச் சம்பத்துக்களோடு கூடிய விருக...
...ன்பதரிது.

[இன்னும் வரும்]

எஸ். சாமிநாதையர்.

மன ஏகாக்கிரம்.

[முன் தொடர்ச்சி]

இனி, சரீர ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியமான வாயுவைப்பற்றிச் சற்று பிரஸ்தாபித்து நிறுத்துவாம். ஆகாரம், பானம் இவைகளைப் பார்க்கிலும் சரீரத்துக்கு வாயுவின் உபயோகம் அதிகமென யாரே அறியாதார்? ஆயினும் அதன் விஷயத்தில் கவனம் செலுத்துவோர் மிகவும் சிலரேயெனக் கூறலாம். சாதாரணமாக நாட்டுப்புறங்களில் சுத்த வாயு தாராளமாகக் கிடைக்கும். பட்டணம், நகரங்களிலோ வென்றால் ஜன நெருக்கத்தாலும், ஜன நெருக்கத்தால் உண்டாகும் அசுத்தங்களாலும் கைத்தொழில் இயந்திரசாலைப் புகைகளாலும், இன்னும் எண்ணிறந்த பலகாரணங்களாலும் சுத்தமான காற்று சுவாசிக்க அதிகப்பணம் செலவு செய்ய வேண்டியதாகவும், செலவுசெய்தாலும் கூடச் சில விடங்களில் அசாத்தியமாகவுமே இருக்கின்றதெனக்கூறலாம். வெளியாகாயத்தில் கலந்திருக்கும் பிராணவாயுவை நாம் உள்ளேசுவாசிப்பது நம் சரீரத்திலுள்ள இரத்தத்தை சுத்திப்படுத்துவதற்கேயாம். நம் சரீரத்திலுள்ள அசுத்தங்களாவன. சரீரத்துக்கு உபயோகமில்லாதேபோன கெட்ட அணுக்கள் வெளியேபோவதற்குரிய மார்க்கங்களுள் சுவாசக்குழலும் ஒன்றேயாம். ஆகையால் தான் நாம் வெளியில் விடும் சுவாசமானது அசுத்த அணுக்கள் கலந்ததாக இருக்கின்றது. நாம் வெளியில் விடும் சுவாசத்தை சரப்பிராணி யாதேனும் சுவாசிக்குமாயின் மரணமே அதன் கதியாகும். அந்தக்காற்றினால் அக்கினியும் எரியாதென்றால் பின் பேசுவானேன்? இவ்விஷயம் எல்லாரும் நன்கு கவனிக்க வேண்டுவதொன்று. இவ்விஷயம் அறிந்தாரும் கூட எச்சரிக்கையாக இருக்கிறார்களில்லை. நம் தேசத்திலுள்ள பூர்வீக வீடுகளெல்லாம் கோழிக்கூடுகள்போல் சற்றுவளர்ந்தவனோ கனத்தவனோ அகத்துச் செல்லக்கூடாத விதத்தில் அவ்வளவு உயரத்திலும் அகலத்திலும் சுருங்கின வாயில்களையுடையனவாயும் காற்றோட்டம் தாரளமாக உண்டாதற்குப் போதிய ஜன்னல்கள் விடப் பெறுதவைகளுமாகவே இருக்கின்றன. அந்தக்காலத்திற்கு அவை சரியாயிருந்திருக்கலாம். தற்பொழுது ஜன நெருக்கமும் பிரவர்த்தியும் ஜாஸ்தி. ஏகதேசம் நாகரீகம் வந்திருக்கிறதென்றாலும் சுகாதார விஷயங்களைக் கவனிக்கிறார்களில்லை யென்றே சொல்ல வேண்டியிருக்கின்றது. இவ்வளவும் போதாமல், ஜன்னல் ஒன்றிரண்டிருந்தால் அதையும் அடைத்துக்கொண்டு 4 பேர்கள் படுக்கக்கூடிய இடத்தில் 10 பேர்கள் படுத்து உறங்குவார்கள். ஒருவன் இராத்திரிபடுக்கைக்குப்போவானானால் காலையில்

அவன் எழுந்திருக்கும்வரை சாதாரணமாக அவனுக்குச்சுவாசிப்பதற்கு 10 அடி நீளம், 10 அடி அகலம், 10 அடி உயரம் அதாவது 1000 (Cubic ft.) கன அடிக்காற்று அவசியம் வேண்டப்படுகின்றது. அதற்குக் குறையும் பொழுதெல்லாம் உடனே தோன்ருவிடினும் கேடுண்டென்பதற்கு யாது தடை? வீடு நல்ல காற்ரேட்டமுள்ளதாக இருக்கவேண்டும். படுக்கை யறையில் இரண்டு ஜன்னல்களுக்குக்குறையாமல் இருக்கவேண்டுவதாவசி யகம். காற்றுக் குளிர்ந்திருக்கிறதென்ரே, வெயில் உள்ளே வருகிறதென் ரே, ஜன்னல்களையும் கதவுகளையும் அடைப்பது கொடியவழக்கம். காற் றுக் குளிர்ந்திருந்தாலும் உரோமம் பட்டுமுதலியவைகளால் செய்யப் பட்டுள்ள உடைகளால் நிவர்த்தித்துக்கொள்ளுதல் உசிதமே. தவிர அதற் காக அதன் ஓட்டத்தைத்தடுத்து ஜன்னலையும் கதவுகளையும் அடைத்து வீட்டு உள்ளிருக்கும் விஷக்காற்றைச் சுவாசித்து மாளுதல் அறிவீனமே யாம். அமெரிக்காவில் **ஆத்மதத்துவசோதனை சங்கத்தில்** ஓர் முக்கிய அங்கத்தினராகிய **சிட்னி ப்ளௌவர்** (Sydney Plower) என்பவர் காய சித்தி பெறுவதற்கு அதாவது ஸ்தூல சரீரம் அழியாமல் நிலைநிறுத்து வதற்கு பிராணவாயுவே முக்கிய ஏதுவாகக்கூறுகிருர். வெளி ஆகாயத் தில் பிராணவாயுவின் அம்சம் குறைந்திருப்பதால் அதாவது ஐந்திலொரு பாகமேயிருப்பதால் க்ஷீணித்துப்போன ஜீவசக்திக்கு அதைச்சுவாசிப்பது போதாமல் மரிக்கநேரிடுகிறதென்றும் பிராணவாயுவைமாத்திரம் வெளி ஆகாயத்திலிருந்து சுத்தமாகப் பிரித்தெடுக்க ஓர் உபாயம் கண்டுபிடித்தால் ஸ்தூல உடம்பையும் அழியாது நிலைநிறுத்தல் சாத்தியமென்றும் கூறுகி ருர். அது எங்ஙனமாயினும் பிராணவாயுவின் முக்கியத்தை நன்கு விள க்குகின்றதல்லவா? இது நிற்க,

நம் நாட்டில் சூரிய கிரணங்களைக்கண்டால் நடு நடுங்குகிருர்கள். கொல்ல வரும் பகைவனுகவே கருதுகிருர்கள். இது மிகவும் அறிவீனம். சூரியனில்லாவிடில் இவ்வுலகமே இராதாகும். எவ் விகாரத்துக்கும் கார ணன் சூரியன். நம்முடைய பிருதிவியே சூரியனினின்றும் தெறித்த ஓர் அணுவென்றும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. உயிர்களின் வாழ்வெல் லாம் சூரியனை வைத்தேயாம். சரீர ஆரோக்கியத்துக்குச் சூரியகிரணங் களைப் போல் இயற்கைப் பொருள்களுள் ஒன்றைக் கூறலாமே யொழிய மனித சிருஷ்டிகளுள் மருந்து வகையிலேனும் வேறெவ் வினத்திலேனும் ஒன்றைக் காண்டல் அரிதினும் அரிதேயாம். தொத்து வியாதிகளைப் போக்குவதற்கு மிகவும் நல்ல மருந்து. இரத்த ஓட்டத்தை அதிகப்ப டுத்தும். சுத்திசெய்யும். சூரியனை ஓர் பெரிய சானிட்டரி ஆபீஸர் (Sanitary Officer) எனக்கூறலாம். எல்லாம் சுத்திசெய்கிறவர் சரீர ஆரோக்கியத்துக்கும் சூரியனுக்குமுள்ள சம்பந்தத்தைவைத்தே சூரி

உபாசனையும் அவ்வுபாசனைசெய்வோர் ஔஷதம் சாப்பிடவேண்டுவதவசிய மில்லையென்பதும் ஏற்பட்டிருக்கலா மென்று நினைக்கவேண்டியதிருக்கின் றது. வர்ண வைத்திய சாஸ்திரம் கண்டுபிடித்திருக்கும் டாக்டர் பாபிட் (Dr. Babbit) என்பவர் சூரியகிரணங்களுக் குள்ளேயே சகல ரோகங் களுக்கும் நிவர்த்தி கண்டுபிடித்திருக்கிறார். சூரிய கிரணங்கள் அதிகக் கொடுமையாகத் தகிக்காத நேரங்களில் வெற்றுடம்போடு அவைகளில் ஸ்நானம் செய்யவேண்டுமென்கிறார். சூரியகிரணங்களும் காற்றைப்போ லவே வீட்டின் ஒவ்வொரு பாகங்களிலும் பிரவேசிக்கத்தக்க விதத்தில் வீடு கட்டப்படவேண்டு மென்கிறார். நமது நாட்டில் சூரியகிரணங்களுக் குப் பஞ்சமில்லை. ஆனால் அவைகளை வீட்டினுள் பிரவேசிக்க இடம் கொடுப்பதில்லை. சூரிய பகவான் புறப்பட்ட வுடனேயே கதவுகள், ஜன் னல்கள் எல்லாம் திறந்து அவர் வரவை எங்கும் சந்தோஷத்தோடு எதிர்பார்த்திருக்க வேண்டியது.

தேகாரோக்கியம் சம்பந்தமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்களுள் சுத்தம் என்பதும் முக்கியமானதொன்றேயாம்.

சுத்தம் என்பது தேகத்தைக் கழுவுதலோடு மாத்திரம் நில்லாமல் சாப்பிடும் உணவு, குடிக்கும் பானம், சுவாசிக்கும் வாயு, உண்ணல், உற ங்கல், இருத்தல், கிடத்தல், நடத்தல் முதலியன செய்யும் இடங்கள், தரி க்கும் ஆடை, உபயோகிக்கும் பதார்த்தங்கள் முதலிய யாவும் சுத்தமாக அதாவது இந்திரியங்களாலும் மனத்தாலும் வெறுக்கப்படத் தகாத ஆனால் ரமிக்கப்படத் தக்க ஸ்திதியிலும் சரீர இயற்கைக்கு ஒத்த விதத்திலும் வைத்துக்கொள்ளல் என்பது வரை விரிந்து கிடக்கப் பெறவேண்டும். நமது தேசத்திற்குப் பிராதகால ஸ்நானம் பொருத்த முடைத்தேயாம். ஆனாலும் அவரவர் சரீர இயற்கையோடு ஒத்து நோக்கித் தெளிவதே நலம். சாதாரணமாக வெந்நீர் ஸ்நானம் தளர்ச்சியையும் குளிர்ந்த ஜல ஸ்நானம் உற்சாகத்தையும் உண்டுபண்ணும். வெந்நீர் குளிக்க இஷ்டமு ள்ளவர்கள் நகச்சூடாக ஆறவைத்து ஸ்நானம் செய்வதானால் அவ்வளவு க்ஷீணம் உண்டாகமாட்டாது.

சரீர ஆரோக்கியத்துக்கு இன்றியமையாதனவெல்லாம் பின்னாலும் ஆங்காங்கு சமயோசிதம்போலக் கூறுவோமாதலின் அதற்கு இடையூறாகச் சொல்லத்தகும் ஒன்றிரண்டு விஷயங்களைப்பற்றி மாத்திரம் சுருங்கக்கூறி நிறுத்தி மனத்தின் ஆரோக்கியநிலைக்கு அவசியமான விஷயங்களைக் கவனி க்க ஆரம்பிப்பாம். சாதாரணமாக ஜனங்கள் பண்டங்களை மாற்றிக்கொள் வதானால் அதாவது ஒரு பண்டத்தைக் கொடுத்து அதற்குப் பதிலாக வே றொருபண்டம் வாங்குவதானால் ஒன்று எவ்வளவுபெறுமோ அதற்கு இம்மி தானும் கூடுதலான விலைபெறத்தக்க பண்டத்தை அதற்குப் பர்த்தியாகக்

கொடுக்க உடன்படமாட்டார்கள். ரூபா 10 பெறுமான நெல்லை வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக ரூபா 11 பெறுமான புளியையோ அல்லது வேறெந்தப் பொருளையோ யாரேனும் எங்கேனும் கொடுக்க உடன்படுவதுண்டோ? இல்லை. இல்லை. ஆனால் சரீர சக்திக்கென்றால் மாத்திரம் அவர்களுக்குக் கணக்குத் தெரிகிறதில்லை. அது தண்ணீர்பட்டபாடுதான். தண்ணீர் அருமையும் ஆற்றுக்குடிக்குப்போனால் தெரிந்துபோவதுபோல் தேகசக்தியின் அருமையும் ரோகிகளிடத்தில் மாத்திரம் கண்டுபிடிக்கிறார்கள். ஆரோக்கியமாக இருக்கிறவர்கள் யாரும் அதைக் கவனிக்கிறதேயில்லை. ஒருவன் மாதம் ஒன்றுக்கு ரூபா7 அல்லது 10 சம்பளம் கொடுக்கிறேனென்று சொன்னால் போதுமானது. ஒரு நாளைக்கு 20 மணிநேர வீதமானாலும் சரியே வருஷம் 365நாளும் உழைக்கத்தயாரென்கிறான். தன்னுடைய தேகத்திலிருந்து கொடுக்கும் சக்திக்குத் தக்கபடி ஊதியம் வருகிறதாவென்று பார்க்கிறதுமில்லை. அல்லது தினசரி அவ்வளவு சக்தி வீதம் செலவுசெய்யப்போதிய சக்தி தேகத்திலிருக்கிறதாவென்று சிந்திக்கிறதுமில்லை. சற்று அளவுக்கு மிஞ்சியவுடன் மாடு படுத்துக்கொள்கிறது. தரித்திரத்தால் வருந்துவோர்கள் வேறென் செய்வார்கள் என்று பலர் நினைக்கக்கூடும். அஃது அங்ஙனமன்று. தரித்திரம் காரணமாக இருப்பதால்தான் முக்கியமாக அவர்கள் குறைந்த சம்பளங்களுக்கு வேலைசெய்ய உடன்படல் தகுதியன்று. தரித்திரத்தின் கஷ்டத்தை ஓர்ந்து தரித்திரர்கள் எல்லாம் நியாயமான கூலிக்குமாத்திரம் உடன்படுவோம் அங்ஙனமன்றேல் உடன்படாது மரிக்கவேனும் செய்வோமென்று தீர்மானமாகக் கூறத்தக்க விதத்தில் தங்களுடைய தேகசக்தியானது செல்வவான் கொடுக்கும் பொருளுக்குச் சற்றும் விலையில் குறைந்ததன்றென்பதை உணர்ந்திருப்பார்களானால், ஐசுவரியவான்கள் என் செய்வார்கள்? கூலிகொடுத்தும் அவர்களை (தரித்திரர்களை) நல்வார்த்தை சொல்லநேரிடும். கூலியாட்களுள் அறிவின் வியாபகக்குறைவே இதற்கு முக்கிய காரணமாயிருக்கின்றது. இஃதிருக்கட்டும். இது தரித்திரர்கள் செயலன்றோ? செல்வவான்களுள் எத்தனைபேர் தன் சக்திக்கதிகமான வேலைசெய்கிறவர்கள்? இஃதெல்லாம் அறிவீனம். மனத்துக்காயினும் சரி, சரீரத்துக்காயினும்சரி, எங்காயினும்சரி, எப்போதாயினும் சரி, துக்கமோ துன்பமோ நேரிடுமாயின் அதற்கெல்லாம் காரணம் ஆழ்ந்து நோக்கின் அறிவீனமாகவே தீரும் என்பதில் சந்தேகமே வேண்டாம். எதுவும் அளவுக்கு மிஞ்சலாகாது: அதுபோலவே தன்னாலியல்வதற்கு அதிகமாக சரீர சக்தியைச் செலவு செய்யின் தேக ஆரோக்கியத்துக்கு இடையூறு நேர்கின்றது. "ஆசைக்கோரளவில்லை" யாயினும் அவ்வெண்ணிறந்த ஆசைகட்கெல்லாம் ஆணிவேர்களாவன மண், பெண், பொன் மூன்றென்பர். இவற்றுள் மண்ணும், பொன்னும் என ஒன்

திலடங்கற்பாலவே. ஆசைகட்கெல்லாம் ஓர் மூடாகிய பணத்தின்மேலுள்ள காமத்தால் தேகசத்தியை அதிகமாகச் செலவிடுவதால் சரீரத்துக்குக் கேடுண்டாமென்று, இப்போது சொல்லிமுடித்தோம். இனி மற்றொரு ஆணிவேராகிய பெண்ணாசையால் சரீர சக்தியை அதிகம் செலவுசெய்து நாசம் போதலைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

இக்கேடு அறிவிலாக் காளைப்பருவத்தின் செயலே எனக் கூறலாம். உலகத்தில் வாழ்வதே இவ்வின்பம் அனுபவித்தற் பொருட்டெனப் பலர் நினைத்து நடக்கிறார்கள். வேறு பலர் அவ்வெறியை அடக்கும் மனோவலியிழந்தாராகித் துன்புறுகின்றனர். இங்ஙனமாக தேகவலி மனவலி குன்றி மிகவும் தளர்ந்து மூப்பைக்காணாது மடிகின்ற காளையர்பலர். இதைப் பற்றி வைத்தியர்களுடைய அபிப்பிராயம் வழக்கம் போல் பலவேதான். சில டாக்டர்கள் இவ்வின்ப நுகர்ச்சி யில்லாமலே ஆரோக்கியமாக விருக்கலா மென்கின்றனர். வேறு சிலர், அஃது ஆரோக்கியக் கேட்டிற்கே ஏதுவென்கின்றனர். எதற்கும் அறிவுதான் முக்கிய காரணம் என்பதே எமது துணிபு. பின்னால் மனத்தைப்பற்றிப் பேசுங்கால் அதில் இவ்விஷயங்களெல்லாம் மனோவலியால் இலேசாகச் சாதிக்கத்தக்கவையேயென விளங்க உரைப்பாம். இவ்விஷயத்தில் எவ்வளவுக் கெவ்வளவு மிதமாக இருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு சரீர ஆரோக்கியத்துக் கேதுவெனக் கூறலாம். இது சம்பந்தமாயும் இன்னும் தேக ஆரோக்கியத்துக்குக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பலவற்றைத் தொகுத்தும் **தேரையர்** என்பார் கூறியுள்ள பல செய்யுள்களுள் ஒன்றிரண்டு இதனைப் படிப்பவர்களுடைய கவனத்துக்காக அடியில் வரைகின்றோம்.

அவை வருமாறு:—

"பாலுண்போ மெண்ணெய்பெறின் வெந்நீரிற் குளிப்போம்
பகற்புணரோம் பகற்றுயிலோம் பயோதரமு மூத்த
வேலஞ்சேர் குழலியரோ டிளவெயிலும் விரும்போம்
மிரண்டடக்கோ மொன்றைவிடோ மிடதுகையிற் படுப்போ
மூலஞ்சேர் கறிநுகரோ மூத்ததயி ருண்போ
முதனாளிற் சமைத்தகறி யமுதெனினு மருந்தோம்
ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

"உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோ
முறங்குவது ராவொழியப் பகலுறக்கஞ் செய்யோ
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றி யருந்தோம்
வாழையிளம் பிஞ்சொழியக் காயருந்தல் செய்யோம்
பெண்கடமைத் திங்களுக்கோர் காலன்றி மருவோம்
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்துநீ ரருந்தோம்
நண்புறவே யுண்டபின்பு குறுநடையுங் கொள்வோ
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

"திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமல்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல்—உண்ணுங்கால்
நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி!"

[இன்னும் வரும்]

வள்ளிநாயகம்.

மௌனம்.

ஆன்மாக்கள் முத்தியடைவதற்கு வேத, சிவாகமங்களில் விதிக்கப்பெற்றுள்ள சாதனங்கள் பல. அவற்றைப்பிரிக்குமிடத்துத் தனக்குக் கீழுள்ளவற்றை நோக்கி மேலாகவும், மேலுள்ளவற்றை நோக்கிக் கீழாகவுமிருப்பதொன்று. தனக்குக் கீழில்லாமையாற் கீழாயிருப்பதொன்று. தனக்கு மேலொன்றிலாமையால் மேலாயிருப்பதொன்று. ஆக முத்திறப்படும். இவற்றுள் தனக்கு மேலொன்றிலாமையாய், முத்தியை நேரே தரத்தக்கதாயுள்ள சாதனம் "மௌனம்". இதனை "அருளாலே தம்மையறிந்தருளாய்ந்தப், பரிபூரணமே பரையாய்-பரை யொழிவி, லானந்தாதீதமாமதது விதசித்தாந்த, மோனம் வேதாந்தமுடிவு" என்ற ஒழிவிலொடுக்க வெண்பானுந் தெளிந்திடுக.

இனி, "மௌனம்" என்ற சொல்லுக்குப் பொருளை நோக்குமிடத்து "சும்மாவிருத்தல்" என்பதேயாம். சும்மாவிருக்குந்தன்மை மெஞ்ஞானிகட்கன்றி, ஏனையோர்க்கு இயலா. ஆகவே மௌனம் ஞானவான்களின் மெய்யுணர்ச்சி என்றுங் கூறலாம்." மிகு நீள்சாந்தமுனிவரன்பால் மிக்க மனத்தின் மெய்யுணர்வாந், தகு நீடுருவாம்பாவனையே சாற்றுமௌனச்சொற்பொருளே" என்ற செய்யுளும் இக்கருத்தை விளக்கும்.

இனி, "இம்மௌனத்தின் றன்மையையும், அநுட்டிப்போரின் றன்மையையும் விசாரிப்பாம். வாக்கு மௌனம், கரண மௌனம், காட்ட மௌனம், சுழுத்தி மௌனம் என மௌனம் நான்காம். இவற்றுள் முன்னையமூன்றையும் அநுட்டிப்பவனைக் "காட்டத்தவசி" என்றும், சுழுத்தி மௌனத்தை அநுட்டிப்பவரை "சீவன்முத்த தவசி" என்றும் நூல்கள் கூறும். காட்டத்தவசியால் அநுட்டிக்கப்படும் மௌனங்கள் சொன்மாத்திரையினும், தோற்றமாத்திரையினும் மௌனமாயிருப்பினும் மௌனத்தின் உண்மையாகமாட்டா. ஆயினும் அம்மௌனங்களையும் ஒரு சிறிது விசாரித்து நீக்குவாம். வாக்கை வசனியாது அடக்குதல் வாக்கு மௌனம். இந்திரியங்களை விடயங்களிற் செல்லவிடாது அடக்குதல் கரண மௌனம். தேகத்தை ஒரு செயலுஞ் செய்யவொட்டாது அடக்குதல் காட்டமௌனம். இம்மூவகை மௌனங்களும் இன்னது செய்கின்றேமென்றும், வேண்டும், வேண்டாமென்றும், சித்த வியாபாரத்தோடுள்ளனவாதலின் முத்தியைத் தரா. இதுபற்றியே நம் தாயுமான சுவாமிகளும் "சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறம் அரிது" என்றருளுவாராயினர். இம் மூவகை மௌனங்களும் முத்தியைத் தருமெனில் ஊமையனுக்கும், வியாதியாலும், வயோதிகத்தாலும், ஏலாமையாலும் விடய அபேக்ஷையில்லாதவனுக்கும், சுழுத்தி நித்திரையுற்றவனுக்கும் முத்தி உண்டெனப்பட்டுப் பல குற்றங்கட்கேதுவாகும். அங்ஙனமாயின் வாக்கு வியாபார நிரோதத்தை முதற்பூமியாக நூல்களிற் கூறப்பட்டிருத்தலின் இஃது அக்கருத்துக்கு முரணாகாதாவெனின், ஆகாமை காட்டுதும். இலௌகிகம் என்றும், சாஸ்திரீயமென்றும், வாக்கு வியாபாரம் இரண்டுவிதம். இவற்றுள் வீண்வார்த்தையாகிய இலௌகிகவாக்கு வியாபாரம் வெகுவித விக்ஷேப ஏதுவானபடியினாலே சமாதி பண்ணாதசமயத்திலேகூட அதை விட்டுவிடவேண்டும். பஞ்சாக்கர ஜெபம், சிவநாம கீர்த்தனம், ஞானசாத்திரம்படித்தல், இவை சம்பந்தமான வார்த்தை இவைகள் முதலான சாஸ்திரீய வாக்கு வியாபாரம் சித்த சுத்திக்கேதுவாகலானும், வெகுவித விக்ஷேபத்துக்கேது வாகாதபடியாலும் சமாதி இல்லாத சமயத்திற் செய்யலாம். இவை சமாதியை வரப்பண்ணும். சமாதி காலத்தில் அந்த வியாபாரத்தையும் விட்டுவிடவேண்டும். "அரிதவ்வீசனே நாமெனவறிவு மேலிடுத, லரிதுவாய்ப் பறையறைந்திடாததினடங்கிடலே" என்ற வள்ளலார்சாத்திரத்தின் கருத்தும் சமாதி காலத்தைக் குறித்ததே. மனோ நிக்ரக சாதனம் ஒன்றுமின்றி இமையளவு பொழுதை ஒரு கற்ப காலமாய் மனோராச்சியஞ் செய்துகொண்டு வாயைமட்டும் மூடிக்கொண்டிருத்தலால் யாதுபயன்? இதுகாறுங் கூறியவாற்றால் இலௌகிக வாக்கு வியாபாரத்தை விடல்வேண்டுமென்ற சுருதி வசனத்துக்கும் மனோவியாபாரத்தோடுகூடிய வாக்கு மௌனம் முத்தியைத் தரா வென்றதற்கும்

முரணுதல் யாங்ஙனமென விடுக்க ஏனைய கரண மென்ன கீட்ட மௌனங்
கட்கும் இங்ஙனமே யூகித்துக்கொள்க. ஞான சாத்திரம்படித்தல் மனோ
நிக்ரக சாதனமென்பதை "ஞான நூ றனையோத லோதுவித் தனற்பொரு
ளைக் கேட்பித்த றான்கேட்ட னன்றா, வீனமிலாப் பொருளதனைச் சிந்தி
த்தலைந்து மிறைவனடி யடைவிக்கு மெழின்ஞானபூசை" என்ற சிவஞா
னசித்திச் செய்யுளானு முணர்க.

இனி சீவன்முத்த தவசியிடத்திருக்கும் சுழுத்தி மௌனத்தின் தன்
மையை விசாரிப்பாம். இம் மௌனத்துக்குச் சுழுத்தியிற்போலச் செயல
ற்றிருத்தல் காரணமாய் இப் பெயரிடப் பெற்றது. ஆயின் இம் மௌ
னம் பாடாணம் போன்று அறிவில்லாமையும், சூனியம் போன்று பொரு
ளில்லாமையு மென்று கூறலாமோவெனின், ஆகா. மற்றென்னையெனின்:
இவ் வுலகத்தின் சடசித்தின் றன்மையை உற்று நோக்கி எக்காலத்தும்
அழியாதிருக்கும் சித்தை அறிந்து சிவமே இவை எல்லாமாய்ப் பிரகாசித்
துக்கொண் டிருக்கிறதென்று அதுவாயிருந் தனுபவித்தலே சுழுத்தி மௌ
னம் என்று கூறுப. இம் மௌன நிட்டைக்குக் கருவித்தொழில் வேண்
டப்படாமையானும், அதுவதுவாய் விளங்கும் அறிவுத்தொழில் மாத்திரை
யே வேண்டப்படுதலானும் இதனையே சும்மா விருத்தல் என்று கூறுப.
"ஊன்றுமூன்றவத்தைக்கப்பா லுயர்முத்தனாகியந்த, மூன்றவத்தைக்குஞ்
சான்றாய் முதலொளியாய்ப்பிறங்கித், தோன்றுமாதேவதேவை யெவன்சும்
மாவநுபவிப்போ, னான்றவனவனேமேலா மதிவர்ணாச்சிரமியாவன்" என்ற
செய்யுளும் இக்கருத்தை இனிது விளக்குதல் காண்க. இம் மௌனத்தி
ன்றன்மையைச் சுருங்கச் சொல்லுமிடத்துச் சிதாகாச சிவரூபமா யிருத்
தலேயாம். இதுபற்றியே "கண்டனவெ லாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்." என்றார் நமது தாயுமானவரும். இத்தகைய
மௌனத்தை அநுட்டிக்கும் தவசிகள் கன்மவயத்தாற் றோற்றத்திற் பல
பிரிவினரா யிருப்பர். ஆயினும் அவர் இரண்டு வகுப்பினராகப் பிரிக்கப்
படுவர். அவற்றுள் ஒருவர் சாங்கியர். மற்றொருவர் யோகியர். இவ்வி
ருவரில் நாடோறும் பழகிவருகின்ற கல்வியறிவாலும் பூர்ணநிட்டையினா
லும் சாதுக்களோடு கூடிச்செய்யும் விசாரணையினாலும் உண்மையையுண
ர்பவர் சாங்கியர். பிராணவாயு, மனம் ஆகிய இவ்விரண்டுஞ் சலியாதி
ருக்கும்படி அடயோகத்தினாலல்லாமல் யுக்தியினால் அடக்கிய விடத்து
உண்மையை யுணர்பவர் யோகியர். இவ்விரண்டில் ஒவ்வொருவர்க் கொவ்
வொன்று எளிதாய்த் தோன்றி அநுட்டிக்கக்கூடும். ஆயினும் இவ்விருவ
ர்க்குமுத்தி ஒன்றே.

இனி இம்மௌனம் வருதற்குரிய சாதனத்தைப் பற்றி விசாரிப்பாம்.
ஒரு பொருளி னிடத்திலே அழுத்தமாய் விருத்திப் பழகுதல், பிராண

வாயுவைச் சலிப்பாது அடக்குதல், மனத்தை ஒருகுறியால் நிறுத்துதலாகிய இம்மூன்றும் மௌன சாதனங்களாம். மௌனத்தின் ஒரு பிரிவாகிய யோகத்துக்கும் இதற்கும் பேத மென்னையெனின்; விடய வாதனை தோன்றாது அதுவா யிருத்தலும், விடயவாதனையிலும், சாதனத்திலும் மாறிமாறிப்பற்றுதலும், விடலும் என்க. ஆகவே மௌனத்தின் உண்மை சித்தத்திற்கு இம்மூன்று சாதனங்களும் இன்றியமையாது வேண்டற்பாலனவே. அச் சாதனங்கள் நூல்களைப் பார்த்தமாத்திரத்திற்றானே யமையா. நூலாராய்ச்சியுடன் ஞானகுருவை யடுத்து அவர் மனமகிழப் பணிபுரிந்துபெறவேண்டும். இக் கருத்துப்பற்றியே "திகழ்மனம்போய்த் தற்பதத்தைத் தெளியு மட்டுந், தேசிகனாற் சொல்வழியிற் செல்லுவாயே." என்றார் ஆன்றோரும். இம் மூன்றில் ஒன்று முறையாய்க் கிடைக்குமாயின் ஏனைய இரண்டுந் தானேவரும். என்னை? ஒரு பொருளினிடத்திலே அழுந்தும்பொழுது மனமும் பிராணனுஞ் செயலற்று அடங்கும். மனத்தை ஒரு குறியில் நிறுத்தும்பொழுது பிராணவாயுவும் அசைவற் றடங்கி அங்கே ஒரு பொருள் தோன்றி அதில் அழுந்தும். பிராணனை அடக்கில் மனமும் அடங்கி அங்கும் பொருள் தோன்றி அழுந்துமாதலின் என்க. இவற்றினுண்மை யெல்லாம் குரு, சிஷ்ய சம்பிரதாயத்தி லினிது விளங்கக்கூடிய தொன்றாம். இத்தகைய சாதனத்தைப் பெற்றாலும் போதா. நெடுநாள் பழகல் வேண்டும். பழகவே ஞானத்தினால் ஆன்மா சிவத்தை அறிவதோ, அன்றி ஆன்மா சிவத்தினிடத்தில் கலந்தொன்றாதலோ முத்தி என்னும் ஐயம்நீங்கி அத்துவிதமாகிய முத்திநிலை தெளியவரும். வரவே பாசங்களெல்லாம் நீங்கும். "நீங்கவே யாவையுஞ் சூனியம் சத்தெதிர்" என்றசிவஞானபோதக் கருத்தின்படி சத்தா மாத்திரமான சிவமாய்ப் பிரகாசிப்பன். இதுவே முடிந்த நிலை. இதுபற்றியே "என்னானை யென்னானை யென்னானை யேகமிரண், டென்னுமற் சும்மா விருவென்று—சொன்னான் திருஞான சம்பந்தன் சீகாழி நாட, னருளாளன் ஞான விநோதன்" என்றார் கண்ணுடைய வள்ளலாரும்.

இன்னும் சொல்லிறந்த மௌனம், வாசனாதீதமௌனம், மூகைமௌனம், அநுபவலய மௌனம், முத்திராமௌனம்; சர்வமுத்திலயமௌனம் தன்மயமௌனம் சர்வலயமௌனமென்று பல இருக்கின்றன. இம்மௌனங்களின் தாரதம்மியங்களை அவகாசங்கிடைத்துழிப் பின்னரெழுதுவாம்.

பொ. மு. முத்தையபிள்ளை,

உப அக்கிராசனாதிபதி. சைவசித்தாந்தசபை, தூற்றுக்குடி.

நட்பு.

[முன் தொடர்ச்சி]

இன்னும் சிலர் நம்மால் அவர்களுக்கு ஏதாவது உதவி கிடைக்கும் வரை, நண்பர்கள்போல் நடித்து அப்பால் நமக்குத் துன்பம்வந்துற்றகாலையில் கைவிட்டுவிடுகிருர்கள்.

"உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்":—
"உறினட் டறினொரூஉ மொட்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினு மென்."
இப்படிப்பட்டவர்களுடைய சகவாசம் நல்லதன்று.

நல்லவர்களுடைய சேர்க்கையானது எப்பொழுதும் மேன்மையையும் சுகத்தையும் கொடுப்பதும்தவிர நம்முடைய தீய குணங்களையெல்லாம் போக்கடித்து, நற்குணமுடையவர்களாகச்செய்கிறது.

(1) ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஓரும்
குலமாட்சி யில்லாரும் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

(2) பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்ருதாம்—தேரின்
சிறியார் சிறுமையும் தோன்ருதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

இப்படி நல்லவர்களுடன் சிநேகம் செய்த பிறகு அவர்கள் சிநேகத்தைக் காப்பாற்றிவரவேண்டும். சிநேகத்தைச் சம்பாதிப்பதைப்பார்க்கிலும் அதைக்காப்பாற்றுவது மிகக்கடினம்.

(1) அழிவந்த செய்யினும் அன்பருர் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

(2) நல்லா ரெனத்தான் நனிவிரும்பிக் கொண்டாரை
யல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

மேற்சொல்லிய ஆன்ருேர்வாக்கியங்களால் நாம் நல்ல யோக்கியர்களுடன் சினேகம்செய்தபிற்பாடு அப்பேர்ப்பட்ட சினேகத்தை இடையில் எவ்வித இடையூறுகள் நேர்ந்தாலும் தவருது நீடித்திருக்கச் செய்யல்வேண்டும்.

இதுகாறும் நல்லவர்களுடன் நட்புச் செய்வதனுல் உண்டாகும் நன்மையையும் இத்தகையாருடன் நட்புச்செய்யவேண்டுமென்பதையும் நட்பைச் சம்பாதிப்பது மாத்திரம் போதாது அதை நீடித்திருக்கச்செய்யவேண்டுமென்பதையும் எடுத்துரைத்தோம். இனி நல்லவர்களல்லாதவர்களுடன் சினேகம் செய்வதனுலுண்டாகும் தீங்குகளையும் கெடுதிகளையும் பற்றிச் சிறிது விசாரித் துரைப்பாம்:—ஆனுல் "பன்றியோடு சேர்ந்த கன்றும் மலந்தின்னும்", என்ற பழமொழிப்படி கெட்டவர்களின் சகவாசம் செய்தால் அதைப்போல மிகுந்த துன்பத்தைத் தருவது வேறென்றுமில்லை.

முன்னமே நம்முடைய மனத்திற்கு விலக்கப்பட்டவைகளிலே பிரியமிருந்துகொண்டிருக்கிறது. அதற்குத் தீயோர்கள்கூடச் சேர்ந்தால் பஞ்சுப் பொதியில் தீயை வைத்தது போலாகும்.

"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்டபின் பவர்க்கு."

அந்தோ பரிதாபம்!

பள்ளிக்கூடங்களில் படித்தும் மாணுக்கர்களிலனேகர் யௌவன தசையில் தாங்கள் புரியும் தீக்கருமங்களால் தங்களுக்கு இவ்வளவு தூரம் பின்னர் கெடுதி விளையுமென்பது உணராதவர்களாய்ச் சிலருடைய துர்ச்சவகாசத்தினுல் விட்டிற் பூச்சியானது விளக்கொளியைப் பார்த்தவிடத்துக் கிட்ட நெருங்கினுல் தன்னைச்சுடும் நெருப்பு என்றறியாமல் அதன் பிரகாசத்தைக் கண்டு மதிமயங்கி அதிலேவிழுந்து இறக்கும் தன்மைபோல் இவர்களும் சூதாட்டத்திலும், கள்ளுண்டலிலும், விபசாரத்திலும் பழகி

"முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின்..............
பிற்பயக்கும் பீழை, பெரிது."

என்பதைத் தெரியாது, இவைகளெல்லாம் பேரானந்தத்தைக் கொடுக்கிறதாக நினைத்துக்கொண்டும் "இளமையிற்கல்" என்பதை மறந்து கல்வி தேர்ச்சியில் முயற்சிசெய்யாது மேற்சொல்லிய துர்ச்செயல்களில் பாண்டித்தியமடையுமுறை கற்று முடிக்கிருர்கள். அப்பால் இவர்கள் வயதில் முதிர்ந்தவர்களான போது, சௌக்கிய ஹானியையும், பொருள் நஷ்டத்தையும், துர்ப்பழக்கங்களையும் சம்பாதித்துக் கொண்டோமேயென்று

மனக்கவலை யுறுவதுமல்லாமல் வித்தியாதாரப் பரிக்ஷைகளிலும் தேறாது அறிவீனராயிருக்கும்படி நேர்ந்ததேயென்றும் துக்கிக்கிறார்கள்.

தாங்கள் கற்றுக்கொண்ட துர்ப்பழக்கங்களை ஒழிப்பது பெரும்பாலாருக்கு அரிது. சிறு இளமையருக்கு அதை ஒழித்துவிட்டால் இளமைப்பருவம் கடந்துபோய்விட்டதினால் அறிவைக் கல்வி கேள்விகளால் விருத்தி செய்வதற்கு அசக்தராகிறார்கள்.

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்"

என்பதைை விளக்கிக்காட்டுவதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணமாயிருக்கிறார்கள்.

"ஊதிய மென்ப தொருவர்க்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்"

"தெளிவிலார் நட்பிற் பகை நன்று"

துஷ்டர்கள் சகவாசம் செய்யாது ஒழித்துவிடுவதே பெருத்தலாபம். அவர்கள் நேசத்தைப்பார்க்கிலும் அவர்கள் பகை நன்று. பெற்றோர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கு வாந்தி பேதி அம்மை சுரம் முதலியவியாதிகள் அணுகாதபடி பாதுகாப்பது மட்டும்போதாது. அவர்கள் அறிவில் தேர்ச்சியடையும்படி நல்ல ஆசாரியனிடத்தில் ஒப்புவித்துக் கல்வியில் விருத்தியடைவதற்கு வேண்டியபடி சாதனங்கள்செய்வதுமட்டும் போதாது. தாங்கள் அவற்றுடன் அவர்கள் நற்குணமுடையவர்களுடன் பழகிவருகிறார்களாவென்றும் அவர்களுடைய ஒழுக்கம் நடைசெவ்வையாயிருக்கின்றதாவென்றும் கவனித்தல் மிக்க அவசியமானது.

"செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு." என்பதே வேதவாக்கு.

(சைவசித்தாந்தசபையில் செய்த உபந்நியாசசாரசங்கிரகம்.)

ஓ. ம. முத்துராமலிங்கம்பிள்ளை,
சைவசித்தாந்தசபை நிருவாகசபையாரிலொருவர்,
தூற்றுக்குடி.

ஆனந்தக்குற்றத்தின் மேற்கோள் விளக்கம்.

சேந்தமிழ்ச் சான்றோர் திருவடி கட்கு
வந்தனம் புரிந்து வரையும் விஞ்ஞாபனம்.

ஞானசாகரப் பத்திரிகையில் யான் "ஆனந்தக்குற்றம்" என்று ஓர் விஷயம் எழுதினேன். அதற்கு மகா-ா-ா-ஸ்ரீ நா. வேதாசலம்பிள்ளையவர்கள் "மறுப்பு" ஒன்று எழுதினார்கள். அக்காலை யான் மிக்க நோயுற்றிருந்தமையானும், பின்னும் பலகாரணங்களாலும் மறுப்புக்கு விடையெழுதிலேன்.

ஆனந்தக்குற்றங் கொள்ளற்பாலதெனல் குறித்து யான் எடுத்துங்காட்டிய நூல்களும் பிறவும் பிரமாணமாகா என்பது நா. வே. பிள்ளையவர்கள் கொள்கை. அவை பிரமாணமாகும் என்பது என்கொள்கை. ஆகவே அவை பிரமாணமாகுமோ அல்லவோ என நாட்டப்புகின் இருவர்க்கும் வரம்பின்றிக் காலக்கழிவு நேரிடுமாதலின் அதுபற்றிய வாதத்தை விட்டுவிட்டேன்.

"ஆனந்தக்குற்றம்" என்றதன்கண் மேற்கோளாக யான் காட்டிய சில சூத்திரங்களைப் பற்றி யையுற்று நா. வே. பிள்ளையவர்கள் "இச்சூத்திரங்கள் யாண்டுள்ளன? எடுத்தாண்ட வுரையாசிரியர் யாவர்? இவை யாரோ சிலராற் கட்டப்பட்டவைபோலும்" என்று எழுதினார்கள். இதுகண்ட நண்பர் பலர் என்னை நோக்கி நீ அச்சூத்திரங்கட் கிடங்காட்டாதவரை நீ கட்டியவெனவே பெறப்படுமாதலின் அவ்வைய மொழித்தல் ஆவசியகமே யென்று வற்புறுத்தினார்கள். இவ்விஷயம் எனக்கும் உடன்பாடுற்றமையின் ஐயந்தவிர்த்தல் ஒன்றே கருதி மேற்கோள் விளக்குதல் மட்டுமே யீண்டெழுதத் துணிந்தேன்.

ஆசிரியர் அகத்தியனார் ஆனந்தவோத்துள் ஆனந்தக் குற்றத்தி னியல்பு கூறினார் என்பதற்கும், அச்சூத்திரங்கள் இன்னவிடத்துள்ளன என்பதற்கும் இன்னவுரை யாசிரியர் எடுத்தாண்டனர் என்பதற்கும் மேற்கோள் இலக்கண விளக்கம் 887-வது சூத்திரவுரையால் அறியலாம்.

மாமூலனாரியற்றிய சூத்திரங்கள் இலக்கண விளக்கம் 783-வது சூத்திர வுரையுள்ளும் 800-வது சூத்திர வுரையுள்ளும் கண்டவை. இனிப் பொய்கையார் முதலிய பண்டையாசிரியர் பாட்டியலுந் தனித்தனி செய்துளாரென்பது அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து முதலாய நூல்களுள் அவ்வப் பாட்டின்கண் இப்பாட்டுச் செய்தார் இவரெனப் பெயர் குறித்தெழுதினாற் போலப் பன்னிருபாட்டியல் என்னுந் தொகை நூலினும் ஒவ்வொரு சூத்திரத்தின் கீழும் அவ்வவ் வாசிரியர் பெயர் குறித் தெழுதப் பட்டிருத்தலாற் காணப்படும்.

இங்ஙனம்
அ. சண்முகம்பிள்ளை.

சைவசித்தாந்தம்.

[முன் தொடர்ச்சி]

இனி நான்கு வேதங்களாவன, இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பன. அவற்றுள், இருக்குவேதம் இருபத்தொரு சாகையும், யசுர்வேதம் நூற்றொரு சாகையும், சாமவேதம் ஆயிரஞ் சாகையும், அதர்வவேதம் ஒன்பது சாகையும் உடையனவாம். வேதங்கள் நான்கு பகுதியாகத் தோன்றினபடியால் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் வருணங்களும்—பிரமசரிய ,கிருகஸ்த. வானப்பிரஸ்த, சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்களும், நான்காயின இந்த வேதங்கள் கருமகாண்டம் என்றும், ஞானகாண்டம் என்றும் இரண்டுவகைப்படும். கருமகாண்டம் கர்மாநுஷ்டானக்கிரமங்களைச்சொல்லும். ஞானகாண்டம் சிவபெருமானது சச்சிதாநந்தசொரூபத்தைக்கூறும். வேதம் என்னுஞ்சொல் அறிதற்கருவி எனப் பொருள்படும். இது ஆயிரத்துநூற்றெண்பது உபநிஷத்தாயிருக்கும். இவைகளுள்ளே அதிசாரமாயும், இரகசியமாயுமுள்ள உபநிடதங்கள் நூற்றெட்டு.

இருக்கு வேதத்துக்கு உள்ள உபநிடதங்கள், ஐதரேயம், கௌஷீதகி, நாதவிந்து, ஆத்மப்பிரபோதம், நிருவாணம், முத்கலை, அக்ஷமாலிகை, திரிபுரை, சௌபாக்கியம், வக்விருச்சானே ,என்னும் பத்துமாம். யசுர்வேதத்துக்கு உள்ள உபநிடதங்கள் கடவல்லி, தைத்திரீயம், பிரமம், கைவல்லியம், சுவேதாச்சுவதரம், கர்ப்பம், நாராயணம், அமிர்தவிந்து, அமிர்தநாதம், காலாக்கினிருத்திரம், க்ஷுரிகை, சர்வசாரம், சுகரகசியம், தேசோவிந்து,

தியானவிந்து, பிரமவித்தியை, யோகதத்துவம், தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்தம், சாரீரகம், யோகசிகை, ஏகாக்ஷரம், அட்சியம். அவதூதம், கரம், உருத்திர விருதயம், யோககுண்டலினி, பஞ்சப்பிரமம், பிராணாக்கினிகோத்திரம், வராகம், கலிசந்தரணம், சரசுவதி, ஈசாவாசயம், பிருகதாரணியம், சாபாலம். அம்சம், பரமகம்சம், சுபாலம், மந்திரிகை, நிராலம்பம், திரிசிகி, மண்டலம், அத்துவயதாரகம், பைங்கலம், பிட்சு, துரியாதீதம், அத்தியாத்துமம், தாரசாரம், யாஞ்ஞவல்கியம், சாட்டியாயனி, முத்திகம், என்னும் ஐம்பத்தொன்றுமாம்.

சாமவேதத்துக்கு உள்ள உபநிடதங்கள், கேனம், சாந்தோக்கியம், ஆருணி, மைத்திராயணி, மைத்திரேயி, வச்சிர சூசிகம், யோகசூடாமணி, வாசுதேவம், மகத்து, சந்நியாசம், அவ்வியக்தம், குண்டிகை, சாவித்திரி, உருத்திராக்க சாபாலம், தரிசனம், சாபாலம், என்னும் பதினாறுமாம்.

அதர்வ வேதத்துக்கு உள்ள உபநிடதங்கள் பிரச்சின்னம், முண்டகம் மாண்டூக்கியம், அதர்வ சிரசு, அதர்வசிகை, பிருக சாபாலம், நிருசிம்மதபனி, நாரதபரிவிராசகம், சீதை, சரபம், திரிபாத்வீய மகாநாராயணம், இராமரகசியம், இராமதாபனி' சாண்டில்லியம், பரமகம்ச பரிவிராசகம், அன்னபூரணை, சூரியன், ஆத்மம். பாசுபதம். பரப்பிரம்மம், திரிபுராதபினி, தேவி, பாவனை, பஸ்மஜாபாலம், கணபதி, மகாவாக்கியம், கோபாலதபனம், கிருஷ்ணம், அயக்கிரீவம், தத்தாத்திரேயம், காருடம், என்னும் முப்பத்தொன்றுமாம்.

இவற்றுள்ளே அதர்வ சிரோபநிடதம், அதர்வசிகோபநிடதம், கைவல்லியோபநிடதம், சுவேதாச்சுவதரோபநிடதம், காலாக்கினி ருத்திரோபநிடதம், என்னும் ஐந்தும் பஞ்சருத்திர மென்னப்படும்.

வேதத்திலே பூருவபக்கமாகச் சொல்லிப் பின்னர்க் கண்டித்த சில பக்கங்களையே சிலர் சித்தாந்த பக்கமாமெனக் கொண்டு, சித்தாந்த வாக்கியங்களுக்குப் பெரியோர் உரைக்கும் உண்மைப்பொருளை விடுத்துத் தாம் கொண்ட விபரீதப் பக்கங்களுக் கிசையப் பொருள் கற்பித்து, அங்ஙனம் தாம் கற்பித்த மீமாஞ்சை மாயாவாதம் பாஞ்சராத்திரம் முதலிய சமயங்களைத் தனித்தனியே வைதிக சமயங்களாகக்கொண்டு, அவ்வைதிக சமயங்களை விரித்துணர்த்தி அவரவர்கள் கருமங்களுக்கிசைய ஒவ்வொருவரும் ...வார் நூலைச் செய்தார்கள். உலகத்தில் பலர் இந் நூல்களையே ...த்தின் உண்மைப்பொருளை விரித்துரைக்கு நூல்களெனக் கொண்டு ...ாந்தத்தின் உண்மைப் பொருளாகிய சைவசித்தாந்தத்தை இகழ்ந்திருக்...ர்கள். ஐயோ இஃது என்னமயக்கம். வேதத்தின் ஞானகாண்டப்பொ

ருள் அனேக கோடி பிறவிகளிற் செய்த தபோபலத்தினாலேயே திருவாணதிட்சை செய்யப்பெற்றுச் சித்தாந்தத்தை ஓதி யுணர்ந்தோர்களுக்கே விளங்குமென்க.

உபநிடதங்களை உற்றுநோக்கி வியாசமுனிவர் செய்தருளிய சூத்திர ரூபமாகிய பிரமமீமாஞ்சை வேதாந்தமெனப்படும். இஃது உத்தரமீமாஞ்சையெனவும் சாரீரகசூத்திரமெனவும் வேந்தாந்தசூத்திரமெனவும் பெயர்பெறும். இந்த வேதாந்தசூத்திரம் நான்கு அத்தியாயங்களையும் பதினாறுபாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐஞ்ஞூற்றைம்பத்தைந்து சூத்திரங்களையும் உடையது. வேதாந்த சூத்திரத்தின் முதலாம் அத்தியாயத்திலே சிவத்தினியல்பும், இரண்டாம் அத்தியாயத்திலே சாங்கிய முதலிய புறச்சமய விரோதபரிகாரமும், மூன்றும் அத்தியாயத்திலே வித்தியாசாதன நிர்ணயமும் நான்காம் அத்தியாயத்திலே ஞானசாதனபலமாகிய வீடு பேறும் கூறப்படும். முதலாம் அத்தியாயத்தின் முதலாம் பாதத்தின் முதலாம் சூத்திரம் பிரமேயமாகிய சிவத்தினியல்பையும் இரண்டாம்சூத்திரம் பிரமாதாவாகிய ஆன்மவியல்பையும் மூன்றுஞ் சூத்திரம் பிரமாணமாகியசிவஞானவிடயத்தையும் கூறும். இந்த வேதாந்தசூத்திரத்தின் மெய்ப்பொருள் வேதாகமங்களை நிலைகண்டுணர்ந்த நீலகண்ட சிவாச்சாரியர் உரைத்த பாடியத்தால் இனிதுவிளங்கும். மற்றைச்சங்கராச்சாரியர் இராமாநுசாசாரியர் மத்துவாசாரியர் உரைத்த பாடியங்கள் சிவாகமங்களுக்கு மாறுபட்ட புறச்சமயநூற்பொருளுடையனவாம்.

இந்தவேதங்கள் பரமசிவனது ஆசனமாயும் பாதுகையாயும் வாகனமாயும் நூபுரமாயும் கோவணமாயும் சரடாயும் கண்களாயும் மொழியாயும் வடிவமாயும் செங்கோலாயும் ஆணையாயும்விளங்கும்.

இந்த வேதங்கள் ஆன்மாக்களுக்கு ஞானத்தைக்கொடுத்து விதிவிலக்கைக்கற்பித்துப் போகங்களை ஊட்டி பாசப்பிணியை அறுத்து முத்தியைக் கொடுக்கும். உதாரணம்:

திருவிளையாடல்.

மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையா
மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமா
மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகும்
மறையே நமது மொழியாகும் மறையே நமது வடிவாகும்.

வேதந் தானே நமதாணைச் சத்திவடிவாய் விதிவிலக்காய்ப்
போதங் கொளுத்தி விலைவிறுத்திப் போகங் கொடுத்துப் பல்லுயிர்க்கு
பேதஞ் செய்யும் பிணியவிழ்த்தெம் பிரியா வீடு தருவதுதே
ஞதஞ் செய்யுந் தார்வேந்தே நமது செங்கோ லதுவாகும்.

திருவாசகம்.

என்னப்ப னெம்பிரா னெல்லோர்க்குந் தானீசன்
றுன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடீ
மன்னுகலை துன்னுபொருண் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.

தன்னை என்றது தனது அருளை. தன் ஐ, தன்னை. தன்-சிவம் ஐ-அருள். வேதவியல்பு முடிந்தது.

இனிப்பதினெண்புராணங்களாவன:—சைவம், பவிடியம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், நாரதீயம், வைணவம், பாகவதம், பிரமம், பதுமம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தமென்பனவாம்.

இவற்றுள் சைவமுதல் பிரமாண்டம் ஈறுகக் கூறப்பட்ட பத்தும் சிவபுராணங்களாம். காருடமுதல் பாகவதம் ஈறுன நான்கும் விட்டுணு புராணங்களாம். பிரமம் பதுமம் என்னும் இரண்டும் பிரமபுராணங்களாம். ஆக்கினேயம் அக்கினிபுராணமாம். பிரமகைவர்த்தம் சூரியபுராணமாம்.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

ஹெலெநாம்பாள்.

[முன் தொடர்ச்சி]

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித்தமராக்கோளல்."

1878-ம் வருஷம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி ஹெலேநாம்பாளும் கர்னல் ஆல்காட்டும் இன்னும் இருவரும் சேர்ந்து அமெரிக்கா தேசத்தை விட்டு மஹாரிஷிகளும் சித்தர்களும் மஹாத்துமாக்களும் வசிக்கும்படியான இந்த இந்தியா வென்னும் திவ்விய தேசத்தை நோக்கிப் புறப்பட்டு மத்தியில் சில தேசங்களைப் பார்த்துக்கொண்டு கடைசியாக 1879-ம் வருஷம் பிப்பிரவரி மாதம்

17-ம் தேதி பம்பாய் நகரம் வந்தடைந்தார்கள். இவர்கள் வந்த கப்பல் பம்பாய் துறைமுகம் வந்து நங்கூரம் போடவும் முன்னமே அமெரிக்கா தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பிரமஞான சங்கத்தின் அங்கத்தவர்களாக இருக்க விருப்பங்கொண்டு கடிதம் எழுதி டிப்ளோமா என்னும் சாதன முறி பெற்றிருந்த மூன்று இந்துக்கள் கப்பலுக்குச் சென்று அவர்களை வாழ்த்தினார்கள். அப்பால் அவர்களுடன் கப்பலை விட்டு இறங்கி பம்பாயில் வந்து அவர்களுக்கமைத்திருந்த விடுதியில் தங்கினார்கள்.

ராஸ் ஸ்காட் என்று நாமந்தரித்த ஒரு ரெவினியூ இலாகா அதிகாரியுடைய சிநேகம் இவர்கள் முன்னமே பெற்றிருந்தார்கள். அவர் தமது வேதாந்த விஷயமாய்ப் பல சம்பாஷணைகள் ஹெலேனாம்பாளுடன் செய்து திருப்தியடைந்து இந்தச் சங்கத்தைச் சேர்ந்திருந்தார். இவர்கள் கப்பலை விட்டிறங்கின தினமே அவர் இவர்களைப் பார்க்க வந்தார். ஹெலேனாம்பாளும் அவரும் ஒரு ஸோபாவிலிருந்து வார்த்தை யாடிக்கொண்டிருக்கும் பொழுது அவர் அவளைப் பார்த்து மனிதர்கள் சித்திகள் பெறக்கூடும் என்று பலகாலம் நீ சொல்லக் கேட்டதேயொழிய அப்படிச் சித்திகள் உண்டென்று திருஷ்டாந்தமாய் நான் கண்டதில்லையே இப்பொழுதும் நான் வடக்கே என்னுடைய உத்தியோகஸ்தலத்திற்குப்போதற்கு முந்தி சித்திகள் உண்டென்பதைத் திருஷ்டாந்தப்படுத்தாமல் என்னைச் சும்மா அனுப்பி விடுவாய் போலுமிருக்கிறதே யென்று பரிவுடன் கூறினர். ஹெலேனாம்பாள் அவர்பால் சற்றுக் கருணை வைத்தவளாதலால் உடனே "நான் உனக்காக என்ன செய்யட்டும்" என்று கேட்டனள். உடனே அவர் ஹெலேனாம்பாள் கையில் வைத்திருந்த அவள் கைக்குட்டையைப் பிடுங்கி அதில் ஒரு மூலையில் அவளுடைய பெயர் இங்கிலீஷில் சரிகையில் சித்திரத் தையலாக இழைத்து வேலை செய்திருப்பதைப் பார்த்து இந்தப்பெயர் மறைந்து வேறொரு பெயர் அதிற்காணும்படி செய்யும்படி சொன்னார். அதன்மேல் "என்னபெயர் உனக்கு இஷ்டம்" என்று ஹெலேனாம்பாள் வினவினள். அப்பொழுது அவர்கள் அவர்

தங்கியிருக்கும் மனேயின் சொந்தக்காரஞகிய "ஹரிச்சந்திரன்" என்னும் பெயர் வரட்டும் என்றனர். உடனே ஹெலெநாம்பாள் அவரைத் தன் பெயர் இழைத்திருந்த மூலேயைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளும்படி சொல்லித் தான் ஒரு மூலேயைச் சற்றே தொட்டு அப்பால் அவர் கையை விரித்துச் சித்திரத்தை யலிருந்த விடத்தைப் பார்க்கச் சொன்னுள். அவர் அப்படிச் செய்யவும் 'ஹரிச்சந்திரன்' என்னும் பெயர் இப்பொழுது அவ் விடத்தில் அவள் பெயருக்குப் பதிலாகச் சரிகைத் தையலில் இழைத்திருக்கக் கண்டு வெகு ஆச்சரியப்பட்டு அந்தக் கைக் குட்டை தனக்கு வேண்டுமென்று அவளே வேண்டிக் கேட்டுப் பெற்றுக்கொண்டு போயினர்.

மறுதினம் முதல் ஜனங்கள் இவர்களேப்பார்க்கத் திரண்டு வந்தார்கள். அநேகர்கள் சங்கத்தைச்சேர்ந்தார்கள். கர்னல் ஆல்க்காட் ஓயாமல் பிரசங்கங்கள் செய்து கொண்டுவந்தனர்.

ஒன்பதுநாட்கப்புறம் "பையோநீர்" (Pioneer) பத்திராதிப ராகிய ஏ. பி. ஸிங்நெட் (Sinnett) என்பவர் இவர்கள் வரவைப் பத்திரிகைகளின் வாயிலாகத் தெரிந்து இவர்களுக்கு ஒருகடிதம் எழுதி இவர்கள் சிநேகம் பெறத் தனக்கு இஷ்டமாயிருக் கிறதென்றும் இவர்கள் தாளிருக்கும் ஊருக்கு வருவார்களாகில் இவர்களுடைய கொள்கைகளேயும் செயல்களேயும் நன்ருய்த் தெரிந்து தனது பத்திரிகையில் பிரசுரஞ்செய்வதாயும் தெரிவித்துக்கொண்டனர். இவர்கள் வந்ததும் இந்துக்கள் இவர்களே அதிகமாய்ப் பூஜித்துக்கொண்டாடிவந்ததினுலும் இவர்கள் இந்துக்களேத்தவிர மற்ற இராஜாங்கம் நடத்தும் இங்லீஷ காரருடைய அனுசரணேயைத்தேடாமலிருந்ததாலும் இராஜாங்கத்தார் இவர்கள்மேல் சந்தேகங்கொண்டு இவர்கள் அன்னிய அரசனுடைய ஒற்றர்களாக இருப்பார்கள் என்றும் வேவு பார்க்க இவ்விடம் வந்திருக்கிருர்கள் என்றும் மதித்து இவர்களேத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கும்படி போலீசாருக்கு உத்தரவு அளித்திருந்தார்கள். இதனுல் இவர்கள் சென்றவிடமெல்லாம் போலீசார் அட்டையைப்போல் இவர்களே ஒட்டிச்சென்று

கவனித்துக்கொண்டிருந்தார். ஆகையால் இந்துக்களில் அனேகர் இராஜாங்கத்தார் விரோதம் வருமேயென்று இவர்களையும் இவர்கள் சங்கத்தையும் விட்டுவிலகி நின்றார்கள். இந்துக்கள் பெரும்பான்மையும் தற்காரிய துரந்தரர்களாய் பொது நன்மையைக்கருதாமலும் அதற்காக உழைப்பதுவே புருஷார்த்தம் என்றுகவனியாமலும் தங்கள் மதமுமதேசமும் எவ்விதச் சீர் கெட்டிருப்பினும் இருக்குகவென்று இருந்தபடியால் கவர்ன்மெண்டாரிடம் மிகச்செல்வாக்குள்ள "பையொனீர்" (Pioneer) பத்திரிகைக்கு அதிபராயிருந்த ஸிந்நேட் என்பவருடைய உதவி இவர்களுக்கு வலியக்கிடைக்க நேரிட்டது பெரும்பாக்கியம் என்று அவர் கேட்டுக்கொண்டபடி அவ்விடம் சென்றார்கள். அவருக்கும் இவர்களுக்கும் நெருங்கிய சிநேகமுண்டாகி அவர் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் பலரையும் தன்னுடைய விடுதிக்குத் தருவித்து இவர்களுக்குச் சந்திப்பு செய்வித்து இவர்களுடைய நன்னடக்கைகளையும் நோக்கங்களையும் அவர்களுக்குத் தெரியும்படி செய்வித்து கவர்ன்மெண்டார் இவர்கள்மேல் கொண்டிருந்த தப்பபிப்பிராயத்தை நீக்கி வைத்தார். ஸிந்நேட் வீட்டில் இவர்கள் தங்கி யிருந்தபொழுது ஹெலேனாம்பாள் பல அற்புதங்கள் செய்து சித்திகள் உண்மை யென்று நமது சாஸ்திரங்களைத் தெரியாத வெள்ளை மனிதர்களுக்கு விளக்கிக் காட்டினள்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

[முன் தொடர்ச்சி]

இந்தக்கீழ்மனசு என்னும் அந்தக்கரணமானது பின் சொல்லப்பட்ட மூவிதச்செய்கைகளில் ஏதேனும் ஒன்றைச்செய்யலாம். அச்செய்கைகளாவன: (1) அது தன்னுடைய மூலஸ்தானத்தைநோக்கி மேலெழுந்து

சென்று விடாமுயற்சியாய் அநுதினமும் அநுசந்தானஞ்செய்து தன்னுடைய "பரலோகதந்தை" யாகிய மேல்மனசு என்னும் மண்ணுலகச் சம்பந்தமான பற்றுக்களால் அழுக்கடையாது மலரஹிதமாயும் புனிதமாயுமுள்ள மனசுடன் ஒன்றுசேர்ந்து ஐக்கியமாகலாம்; (2) அல்லது சாமானிய ஜனங்கள் பெரும்பான்மையா யிருப்பதுபோல் அது பகுதி மேல்நோக்கியும் பகுதி கீழ்நோக்கியு மிருக்கலாம்; (3) அல்லது அது காமத்துடன் ஒன்றாய் ஐக்கியப்பட்டுப் போகும்படி காமசுபாவங்களால் நிறைந்து மூடப்பட்டுக்கடைசியாய்த் தனது தந்தையினின்றும் பலவந்தமாய் அறுபட்டுப்பிரிந்து நசித்துப் போகும்படியான அதிகோர துக்ககதியை யடையலாம்.

முதற்கதி. அதாவது அந்தக்கீழ்மனசானது தனதுமூலத்தை நோக்கி மேலெழுந்துசென்று பரலோகத்தில் உள்ளதன் தந்தையுடன் ஒன்றுசேர்ந்துஐக்கியப்படுவது; எண்ணிறந்த ஜனங்கள் எடுத்து ஒவ்வொரு பிறவியிலும் இந்தலக்ஷியத்தையே நாடி அம் முடிவையடையவேண்டிப் பாடுபட்டுவருவதனாற்றான் இந்த மஹாவீர வெற்றிகிடைக்கும். இந்தலக்ஷியத்தைவைத்து விடாமுயற்சியாய்ப்பாடுபட்டு வருவதனால் பிறவிக்குப்பிறவி ஸ்தூலசரீரமானது சுத்தமாய் அது மனசின் *பிரேரணங்களுக்கு இசைந்து ஸ்புரிக்கும்படியாக மேலும் மேலும் நுண்மையான இணக்கம் பெற்று வருகின்றது. அப்பொழுது மனசின் கிரணத்திற்குக் காமதத்துவத்தின் மந்ததரமானபாகம் உபாதியாய்ப் பொருந்துவது கிரமமாய்ப் படிப்படியாய்க்குறைந்து கொண்டேவருகின்றது. அப்பால் கடைசியாக அந்தக்கரணமானது காமத்திற்கு ஆதியில் அடிமையாயிருந்ததுபோய் அந்தக்காமத்தையாளும் அதிபதியாய் நின்று மனசின் பிரேரணங்களுக்கு ஒத்துஸ்புரிக்கும் தேகத்தைப்பொருந்தி ஜோதிமயமான தன் மூலத்துடன் ஒன்றி ஏகமாய் ஐக்கியப்பட்டு விடுகின்றது. அதாவது கீழ்சுபாவமானது பரவிச்சைக்குப் பூரணமாய் இணங்கிப்போகின்றது. அதாவது தன்னிச்சையெல்லாம் பரவிச்சையாயிருக்கின்றது. இப்படியான மனிதன் மஹாத்துமா, நாதன், ஞானி, குரு, சற்குரு, குருதேவன், பரமகுரு, என்று சொல்லப்படுகின்றான். இவன் பூரணனாய் நிற்கின்றான். இவனுக்குப் பிறவிச் சக்கரச் சுழல் நின்றுவிட்டது. இவன் கிருத கிருத்தியன். இனி இவன் பிறக்கவேண்டியதவசியமில்லை. ஜீவகாருண்ணிய சிந்தையால் மற்ற ஜீவர்களுக்கு அருள்புரிந்து அவர்களைக் கடைத்தேறும்படி செய்வதற்காகத் தன்னிச்சையால் அவன் மறுபடியும் இப்பூவுலகத்தில் வந்து ஜனிக்கக்கூடும் அல்லது அவன் ஸ்தூலதேகமில்லாமல் இப்பூலோகத்தைச் சுற்றியிருக்கும் மற்றைப் புவனங்

*பிரேரணம்—: தூண்டல், ஏவுதல், உந்துதல், ஓட்டுதல், சலனம்.

களில் வசித்துக்கொண்டு இவ்வுலகமும் அதிலுள்ள ஜீவர்களும் மேற்செல்லுதற் கேதுவான உதவி அவர்களுக்குத்தெரியாமலே செய்துகொண்டிருக்கக்கூடும். இவனுடைய பெருமை அளவிட்டுச் சொல்லக்கூடியதன்று. "ஞானியின் விவகாரம் உலகுபகாரம்" என்றது இம்மஹாபுருஷனைக் குறித்தே. இந்தயோகியுடைய தரிசனம் பட்டமாத்திரத்திலேயே சாமானிய மனிதர்களுக்கு நல்லறிவு உதிக்கும்.

இரண்டாவது பக்ஷம்: அது பதி பரத்தை நோக்கியும் பதி இகத்தைநோக்கியும் இருக்கலாம்: இச் செயல்தான் உலகத்துச் சாமானிய மனிதனுடைய சாதாரண அனுபவம். எப்பொழுதும் பரத்தையே நாடாத மனிதன் உலகில் வெகு அபூர்வம். எம்மனிதனும் ஏதோ ஒரு காலத்தில் ஈஸ்வரனை விளக்கின்றான், நற்கதி யடையவேண்டுமேயென்ற தேட்டம்கொள்ளுகிறான், உலக வாழ்வு அநித்தியம்; அதில் சுகமில்லை; எல்லாம் மாயம் என்று சிந்திக்கின்றான்.

உலக வாழ்வு முழுவதும் ஒரு யுத்தகளம். அந்தக்கரணம் என்னும் ஸ்தலத்தில் யுத்தம் மும்முரமாய் நடக்கின்றது. இந்த மனோ மயகோசமாகிய இடத்தில் தான் மனசு மனிதன் மேல் ஆட்சி பெறுவதற்காகக் காமத்துடனே போர் புரிகின்றது. இந்தப் போரைத்தான் நமது சாஸ்திரங்களில் விவேகத்திற்கும் மனத்துக்கும் தர்க்கம் நடப்பதாகவும் விவேகம் மனத்துடன் சண்டை செய்வதாகவும் சொல்லியிருக்கின்றது. சிலவிடங்களில் மனசும் புலனும் யுத்தஞ்செய்வதாகவுஞ் சொல்லும். புலன் என்றது காமத்தை.

மனோமய கோசமாகிய இடத்தில் மனசு காமத்துடன் போர்புரிந்துகொண்டிருப்பதில் உடனே மேல்நோக்கிய நாட்டம் வெற்றிகொள்கின்றது. காமக்கூறாகிய புலன்களாகிய விலங்குகள் தகர்க்கப்படுகின்றன; ஜீவனானவன் தனது உற்பத்தி ஸ்தானத்தின் ஜோதி தன்னிடத்தி லிருப்பதுகொண்டு சம்சாரமென்னுஞ் சேற்றை உதறித்தள்ளி நீக்கிக்கொண்டு வெகு பலமான சிறகுகளை வீசி மேலோங்கி எழும்பிப் பறக்கின்றான். ஆனால் அந்தோ! அதி சீக்கிரத்தில் சிறகுகள் ஓய்ந்து தளர்ந்து சோர்ந்து தத்தளித்துத் தடுமாறுகின்றன. அவைகள் ஆகாயத்தில் வீசாமல் ஆறிவிற்கின்றன. அப்பால் மேல்தர ஆகாயத்தை உண்மையில் தன் வாசஸ்தானமாக வுடைய இந்த *இராஜ பக்ஷியானது சரேலென்று கீழ் விழுந்து மறுபடியும் சம்சாரமாகிய அளற்றில் பதைபதைப்புடன் பொத்தென அமிழ்கின்றது. உடனே காமம் அதைக் கீழிருக்கும்படி அதற்கு விலங்குபூட்டிவிடுகின்றது.

* ஜீவன்.

பூலோக வாழ்க்கைக்கு ஏற்பட்ட காலம் முடிந்து மரணம் நேர்ந்து தேகம் கீழேவிழுந்தபிறகு இந்தக் கீழ்மனசு என்னும் ஜீவன் என்னவா கிறுன் என்பதைச் சற்று விசாரிப்பாம். இதைப்பற்றி விரிவாய் இப்பொழுது சொல்வது கூடாது. அப்படிச்சொல்ல ஆரம்பிப்போமாஞல் இப்பொழுது எடுத்துக்கொண்ட விஷயமாகிய மனிதனது எழுகூறு முடிவுபெறத் தாமதமாகும். ஆகையால் இதைப்பற்றி மொத்தமாய் இப்பொழுது சுருக்கிச்சொல்லி வேறு சந்தர்ப்பத்தில் அதைப்பற்றி விரிப்பாம்.

இந்த ஸ்தூலவுடல் இவ்விடத்தில் பிணமாய் விழுந்தவுடன் காமமனசு என்னும் ஜீவனுனது ஸ்தூலதேக பந்தத்தினின்றும் விடுபட்டு நீங்கி இப்பூலோக தத்துவத்திற்கு அடுத்த மேலான *புவர்லோகதத்துவத்திஞலாய தேகமாகிய யாதனு சரீரம் என்னும் உடையைப் போர்த்திக்கொண்டு சிறிதுகாலம் புவர்லோகத்தில் வசிக்கின்றது. அங்கு மனேகிரணத்தில் காமத்தினுல் அழுக்கடையாமல் சுத்தமா யிருப்பதெல்லாம மெதுவாய்ப் படிப்படியாய்க் காமத்தினின்றும் சிக்குவிட்டுக் கழன்று பிரிந்து காமமும் அதினின்றும் பிரியக்கூடாமல் சிக்கிக்கொண்ட மனேகிரணத்தின் தேஜசும் கலந்து புவர்லோகத்தில் நிற்கவும் பிரிந்த சுத்த மனேகிரணமானது புவர்லோகத்திற்கு மேலான தேவஸ்தானம் என்னும் சுவர்லோகத்தின் கீழ்மட்ட ஸ்தலத்தில் ஜீவனுடைய சற்கருமத்துக் கிணங்க வெகுகாலமிருந்து அப்பால் பூலோகத்தில் அனுபவித்த அனுபவங்களில் உயர்தர மனசுடன் சேர்த்து அதன் வண்ணமாகக் கூடிய சுபாவமுள்ள அனுபவங்களைத் தன்னுடன் எடுத்துக்கொண்டு தன்னுடைய மூலத்திற்குத் திரும்பிச் செல்கின்றது. இவ்விதமாக ஒரு பிறவிக்கும் அடுத்த மறுபிறவிக்கும் இடையிலுள்ள காலத்தின் பிற்பாகம் பூலோக அனுபவங்களை யார்ச்சிக்க இரண்டாகப் பிரிந்த மனசு மறுபடியும் ஒன்றுகின்றது! நாம் இன்னும் விசாரிக்கப் புகாத மானுஷீயக் கட்டில் மிக்குயர்ந்த இரு கூறுகளாகிய ஆத்மா—அருள் அல்லது ஆத்மா—புத்தியால் கவிந்து காக்கப்பட்டு இந்த நான் என்னும் மனேமய அஹம் ஸ்வர்க்க லோகத்தில் பிரஞ்ஞையுட னிருந்து இப் பூவுலக வாழ்வின் போராட்டங்களிஞலடைந்த வயாசத்தினின்றும் இளைப்பாறி யிருக்கின்றது. கீழிறங்கிவந்த மனேகிரணமானது தன் மூலமாகிய மனசில் போயொடுங்கும்பொழுது மண்ணுலக வாழ்வில் ஆர்ச்சித்த அனுபவங்களை மனசின் பிரஞ்ஞைக்குக் கொண்டு போய்ச்சேர்க்கின்றது. இவ் வனுபவங்கள் இவ்விதம் மனேபிரஞ்ஞையை யடைவதினுல் பூலோக வாழ்வின் பிரஞ்ஞைக்கும் சுவர்க்கலோக வாழ்வின் பிரஞ்ஞைக்கும் தொடர்ச்சி யிருக்கின்றது. சுவர்க்கலோக அனுப

*புவர்லோக தத்துவம்—அப்பு தத்துவம்.

வத்தில் பூலோக துக்க அனுபவங்கள் செல்லுகிறதில்லை. பூலோகத்தில் வாழ்ந்தபோது எண்ணின சுத்தமும் கம்பீரமும் உன்னதமுமான எண்ணங்களும் இச்சைகளுமாத்திரம் சென்று அவ்விடத்தில் பூரணமாகின்றன. "மனசு தன்னுடைய ஸ்வர்க்கத்தை சிருஷ்டித்துக் கொள்கின்றது, என்னும் வாக்கியம் பூரணமாய் உண்மையே. ஏனெனில் எவ்விடத்திலும் மனிதன் எப்படி நினைக்கின்றானோ அப்படியாகின்றான். திருசியதலமாகிய பூலோகத்தில் மனசு எந்தத் தடித்த ஸ்தூல தத்துவத்தின் மூலமாய்த்தொழில் செய்கின்றதோ அந்த ஸ்தூல தத்துவத்தினால் சுவர்க்க பதவியில் அந்த மனசு தளையப்படாமல் அதினின்றும் விடுபட்டு நிற்கின்றது. ஆகையால் தான் பூலோகத்தில் ஸ்தூல தத்துவத்தின் தடுப்பின் தடையினால் பூரணமாகாத எண்ணங்களும் இச்சைகளும் சுவர்க்கத்தில் பூரணமாகின்றன. சுவர்க்கத்தில் கழியுங்காலம் மறுபடியும் புதிதாய்ப் பயணம் துவக்குதன்முன் ஓய்ந்திருந்து பூலோக அனுபவங்களைத் தன்னதாக்கிக் சமநிலைகண்டடையுங் காலமாம். அது பூலோக வாழ்வென்னும் இரவை யடுத்துவரும் பகலாம். ஸ்வர்க்கத்தில் ஜீவன் தங்குங்காலம் அந்தந்த ஜீவர்கள் அடைந்த பக்குவத்திற்குத் தகுந்தபடி நீண்டும் குறைந்துமிருக்கும், லௌகிகத்திலும் வைதீகத்திலும் கலந்து நடக்கும் சாதாரண நடுத்தரமான மத்திம மனிதனுடைய ஸ்வர்க்கானுபவ காலம் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷம் வரை நீடிப்பதாகக் கூறுவர்.

புனர்ஜென்மம் உளதாயின் ஏன் நமக்கு சென்ற ஜென்மத்தின் ஞாபகமில்லையெனப் பலர் கேட்கின்றார்கள். சற்று முன்சொன்ன சங்கதியை உற்றுநோக்கினால் காரணம் தெளிவாய் விளங்கும். ஒவ்வொரு பிறவியிலும் மனசு இரண்டுபட்டு ஒரு பகுதி பூலோக அனுபவங்களையும் அறிவையுங்கிரகிப்பதற்காகக் கீழிறங்கி ஸ்தூலதேகத்தின் மூளையைப் பிரேரித்துக்கொண்டிருக்கின்றது. இறந்தபின் ஸ்தூலதேகத்துடன் மூளையும் அழிந்துபோகின்றது. கீழிறங்கி அதைப் பிரேரித்துத் தொழில் செய்துகொண்டிருந்த மனோகிரணமோ தான் ஆர்ச்சித்த பூலோக அனுபவங்களையும் அறிவையுங் கொண்டுபோய் மனசில் சேர்த்து அதனுடன் ஒன்றாய்விடுகின்றது. ஆகையால் சென்ற ஜன்மத்தின் அறிவு மனசில் தங்கியிருக்கின்றது. மறுபிறவி வரும்பொழுது சென்ற ஜென்மத்தின் தேகம் வருகிறதில்லை. அது அப்பொழுதே அழிந்துபோய்விட்டது: நூதனமாய் ஒரு தேகம் உண்டாய் அதில் மனசு அல்லது ஜீவன் பிரவேசிக்கின்றான். இந்த தேகத்திலுள்ள மூளையும் புதிது, சென்ற ஜென்மத்ததன்று. பிறவியெடுப்பது பூலோக அனுபவத்திற்காகவாதலால் தேகத்தில் பிரவேசிக்கும்பொழுது மனசு முன் சொல்லியபடி இரண்டாய் ஒரு பகுதியாகிய கிரணம் கீழிறங்கி மூளையைப் பிரேரித்துப் புதிதாய் ஆர்ச்சிக்கவேண்டிய

அனுபவங்களை ஆர்ச்சிக்கின்றது. இந்தமூளை சென்றஜன்மத்தின் மூளையன்றாதலால் மனோகிரணம் அதைத் தூண்டும்பொழுது சென்ற ஜன்மத்தின் ஞாபகம் அதில் வருகின்றதில்லை.

ஆனால் இந்தக்கிரணமானது சாமானிய மனிதர்களிடத்துமூளையிலேயே தங்கி அவ்விடத்திலேயே தொழில் செய்துகொண்டிருப்பதுபோல் இல்லாமல் விடாமுயற்சியால் தேகத்துடனிருக்கும்பொழுதே அது மேல்நோக்கி மனசுடன் கலந்துவிட்டால் அப்பொழுது பிரஞ்ஞை அல்லது அறிவு அந்தக்கிரணத்தின்வழியாய் மேலேறி மனசிடம் செல்லவும் கீழிறங்கி மூளையிடம் அதாவது ஜாக்கிரத்தில் வரவுமாயிருக்கும். அப்பொழுது மனசில் பதிந்திருக்கும் முன்ஜன்ம அனுபவங்களெல்லாவற்றையும் கிரணத்தின் வழியாய் பிரஞ்ஞைகொண்டுவந்து மூளைக்குக்கொடுக்கும். அதனால் கழிந்த ஜன்மங்களின் ஞாபகம் ஜாக்கிரத்தில்வரும். ஆகையாற்றான் ஞானிகள் மாத்திரம் முற்பிறவிகளின் ஞாபகம் பெற்றிருக்கின்றார்கள்.

இனிப் புவர்லோகத்தில் காமத்துடன் கலந்துதங்கிப்போன மனோகிரணத்தின் அசுத்த பாகத்தைப்பற்றி நோக்கலாம். அது அசுத்தமான போதிலும் மனசின் அம்சமானதினால் ஜடமாகிய காமதேகத்திற்குச் சொற்ப அறிவைக்கொடுக்கின்றது. இந்த அறிவுதெளிவாயிராது. பூலோகத்தில் ஜீவன் அனுபவித்த அனுபவங்களின் ஞாபகம் தொடர்ச்சியாயில்லாமல் விட்டுவிட்டுக்குலைந்து கலவரமாயிருக்கும். உயிருடனிருந்தபொழுது காமக்குரோதாதிகள் மிகவும்பலமாயும் மனசின் அம்சமாகிய விவேகம் மெலிந்தும் இருந்திருக்குமாகில் காமதேகமானது வெகுதிடமாய் உருற்றப்பட்டு ஸ்தூலதேகத்தின் அழிவிற்கப்புறமும் வெகுகாலம் கலையாமலிருந்துகொண்டு சேஷ்டைசெய்து கொண்டிருக்கும். காமக்குரோதாதிகளுக்கு அதிகமாயிடங்கொடுத்து அவைகள் வெகுவீரமாய்ச் சேஷ்டை செய்யும்படி விட்டிருந்ததினால் மனோகிரணத்தின் அம்சம் அதிகமாகக்காமத்திற் சிக்கி அதனுடன் தங்கியிருக்குமாகையால் அந்தக்காமதேகம் அதிக அறிவையுங் காட்டும். உயிருடன் உலகில் வாழ்ந்தபோது விவேகத்தினால் புலன்களை வென்று காமக்குரோதாதிகளை மீறவோட்டாமல் செய்தும் மனத்தை நல்ல வழிகளில் பயிற்றியும் பரிசுத்தமான எண்ணங்கள் எண்ணியும் செயல்கள் செய்தும் வந்திருந்தால், காமதேகமானது மிகவும் அற்பமாய் உருற்றப்பட்டு வெகு சீக்கிரத்தில் கலைந்து உதிர்ந்து நசித்துப்போம்.

புவர்லோகத்தில் தங்கி நிற்கும் காமதேகத்திற்குப் பிரேதம் என்று பெயர். பிசாசம் என்றும் சொல்லுவார்கள். முன்சொன்னபடி மனசின் அம்சம் இதில் அதிகமாய்க்கலந்து நின்றால் மதிக்கத்தக்க அறிவை இப்

பிரேதங்காட்டும். பலமான மிருகசுபாவமும் முரட்டுப்புத்தியும் பொருந்தின மனிதர்களின் காமதேகம் இப்படியிருக்கும். உரத்தகாமமுள்ள மனிதனிடத்தில் தொழில் செய்யும் அறிவும் அதிக நுண்மையானதாகவில்லாவிட்டாலும் பலமும் ஊக்கமுமுள்ளதாகவிருக்கும். இவ்விதமனிதனுடைய பிரேதமானது இன்னும் இவ்வுலகத்தில் உயிருடன் வாழும் மனிதர்களுடைய தேகங்களினின்றும் வெளிவீசும் *உயிர்க்காந்தி ஓட்டங்களினல் இன்னும் அதிகமாக உயிர்ப்பெய்தித்தாழ்ந்ததரமான மனோசக்தியை அதிகமாய்க் காட்டலாம். ஆனல் இம்மாதிரியான பிரேதத்திற்கு அறிவின்சேஷ்டையிருந்தபோதிலும் பகுத்தறிவுகிடையாது. நற்குண உற்சாகங்கள் கிடையாது. அது நசிக்கும் சுபாவமுள்ளது.

அதனுடன் சகவாசஞ்செய்தலும் அல்லது எவ்வித தொந்தம் வைத்துக்கொள்ளலும் கேடுவிளைவிக்குமேயல்லது அணுவளவேனும் நன்மை பயக்காது. "சாமியாடுகிறவர்கள்" "பேய்பிடித்தவர்கள்" என்பவர்கள் பெரும்பான்மையும் அப்பிரேதசம்பந்தம் பெற்றவர்கள்தாம். இப்பிரேதங்கள் உயிருடன் வாழும் மனிதர்களின் தேகங்களினின்றும் காமசுபாவ தத்துவங்களினின்றும் சக்திகளை உறிஞ்சித் தங்களுடைய ஜீவிப்பை நீடித்துக்கொள்ளுகின்றன. அதனல் இந்த உயிருடன் ஜீவிக்கும் மனிதர்களின் உயிர்ச்சக்தி வற்றுகின்றது. மேலும் விரும்பத்தகாத புவர்லோக தொந்தங்களை இம்மனிதர்களுக்கு உண்டுபண்ணி அவர்கள் மனத்தை அதிக அழுக்காக்குகின்றன .ஆகையால் "சாமியாடிகள்" முதலியவர்களின் சம்பந்தம் வைத்துக்கொள்வது கெடுதிபயப்பது. தீய எண்ணங்கள் கொள்ளாமல் மனத்தை நல்ல வழியிலேயே திருப்பிக்கொண்டு கெட்ட எண்ணங்கள் உதிக்க அவைகளை மாற்றி நல்ல எண்ணங்களையே எண்ணிக் கொண்டிருக்கும் படியான அப்பியாசஞ் செய்பவர்களிடத்து இப்பிரேதங்கள் அண்டுதல் செய்யமாட்டா. ஆகையால் அம்மனிதர்களுக்கு இவைகளால் ஒரு கேடும் உண்டாகாது. மேஜைகளில் நடக்கும் பரமியக்கொலுக்களின் விசித்திரக் காக்ஷிகளில உண்டாவதெல்லாம் பெரும்பான்மை

* உலகத்தில் ஒவ்வொருவஸ்துவுக்கும் காந்தி அல்லது தேஜஸ் உண்டு. உயிருள்ள பிராணிகளின் தேகத்திலிருந்து புறப்படும் காந்திக்கு உயிர்க்காந்தி யென்று பெயர். இங்கிலீஷில் காந்தி அல்லது தேஜஸை மாக்நேடிஸ்ம் (Magnetism) என்று சொல்லுவார்கள். தேகத்திலிருந்து காந்தியானது சதா வெளி வீசிக்கொண்டிருக்கின்றது. மேஸ்மெரிஸ்ம் (Mesmerism) என்று இப்பொழுது வழங்கும் வித்தையில் அது செய்யும் மனிதனுடைய காந்தியானது வியாதியஸ்தனுக்குச்சென்று வியாதியைக் குணப்படுத்துகின்றது.

யும் இக் காமப்பிரேதங்களாற்றுன். ஆகையால் அக் கொலுவுக்கு வேடிக்கைபார்க்கச் செல்லல் கெடுதி தேடிக்கொள்வதாம். உயிர்ப்பலிகள் நடக்கும் கோயில்களிலும் இக்காமப் பிரேதங்கள் வெகு உல்லாசமாய் உலாவும். ஆகையால் இவ்விதக் கோயில்களுக்குப் போதலும் கேடு தேடிக்கொள்ளுவதற்கு ஒரு வழியாம்.

[இன்னும் வரும்]

தி. மீனுக்ஷிசுந்தரம்பிள்ளை.

நாட்டுக்கோட்டை நகரததார் கவனிக்கத்தக்கது.

பாநுவின் ஒளி விளங்கும் பூவுலகமுற்றும் இந்நகரத்தாரையறியும். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற திருவாக்கை முற்றும் பின்பற்றிச் செல்பவர்கள் இவர்களேயாம். நம் தமிழ்நாட்டில் செல்வச்சிறப்பும் சிவபுண்ணியப் பேறும் பெற்றுள்ளவர்கள் வேறு யாவர்? அறுபத்துமூன்று நாயன்மார்கள் குருபூசை மடங்களும், சங்கீத பாடசாலைகளும், வித்யாசாலைகளும், பசுமடங்களும், அன்னசத்திரங்களும், திருநந்தன் வனங்களும் இவை முதலான எத்தனையோ பெரும்புண்ணியங்களும் இந்நகரத்தார்களால் ஆங்காங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. சிதம்பரம் திருவானைக்கா முதலிய சில இடங்களில் தமிழ்வேதபாடசாலைகளையும் ஸ்தாபித்துள்ளார்கள். தேவிகோட்டையில் கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்திருந்த ஸ்ரீமாந் ராம. அரு. அருணசலஞ்செட்டியாரவர்கள் 17 சிவஸ்தலங்களில் கும்பாபிஷேகம் செய்தனர். திருவாரூரில் மிகச்சிறந்த ராஜகோபுரத் திருப்பணியை இரண்டுவருஷத்தில் முடித்தார்கள். இந்த அருணசலஞ்செட்டியார் அவர்களின் நற்றவப்புதல்வரும் சிவபத்தி யடியார் பத்தியிற் சிறந்த பிரபுசிகாமணியுமாகிய ஸ்ரீமாந் சோமசுந்தரஞ்செட்டியாரவர்களோ "மகனறிவு தந்தையறிவு" என்ற திருவாக்கின்படி சிவபுண்ணியமே செல்வப்பேறெனக்கொண்டு பற்பல அரிய பெரியபுண்ணியங்களை யியற்றிவருகின்றார்கள். தேவிகோட்டை ஜமீந்தார் ஸ்ரீமாந் அள. அரு. அருணசலஞ்செட்டியா

ரவர்கள் கவர்ண்மெண்டாரால் மிக மதிக்கப்பெற்றவர். தமிழ்வித்வத்து மிகவும் கொண்டவர். சங்கீதத்தில் பூரணதேர்ச்சிவாய்ந்தவர். சுரபத்துவாசிப்பதில் அதி விநயசாலி. காளையார்கோவிலில் யானைமடுவில் மையமண்டபம் விமானம்முதலிய திருப்பணிகள் பல செய்வித்து இரண்டு கிராமங்களையும் தானம் செய்தவர். இராமேசுரத்தில் 10 வருஷத்தில் முடிக்கக்கூடிய இராஜகோபுரத்தை இரண்டுவருஷத்தில் முடிப்பித்தவர். இக்கனவான் ஒவ்வொருவரையும் நிறுத்துவைக்கும்மதிவலியுற்றவர். சாஸ்திரப்பிரக்ஞை நிரம்பவாய்ந்து நல்லொழுக்கசீலம் பொருந்திய ஸ்ரீமத் நா. பெ. நா. மு. முத்துராமையாஅவர்களை இராமேசுரத் திருப்பணிக்குத் தேர்ந்தெடுத்தமைபற்றி மகிழாதாரில்லை.

இன்னம் இந்நகரத்தார்களுள்ளே ஏனைய பல சீமான்களும் பற்பல சிவதருமங்களில் தலையிட்டு ஒழுங்குற நடாத்துகின்றனர். சமயம் வாய்த்தபோது ஒவ்வொருவர் செய்கை நலத்தைப் பற்றியும் பேசுவாம்.

ஆனால் இவர்கள் யாவருமே தமிழ்ப்பாஷாபிமானம் பெரிதுங்கொண்டு பலவகையாலும் தமிழை வளர்த்தலில் இப்போதிருப்பதைப் பார்க்கிலும் இன்னும் பெரிது ஊக்கங்கொள்ள வேண்டுமென்பது எமது விருப்பம். இன்னவர்கள் எந்த ஸ்தலத்துக்குக் கும்பாவிஷேகம் செய்யப்புகுந்தாலும் அத்தலம் பாடல்பெற்றதாக இருக்கவே விரும்புகிறார்கள். ஆகவே முழுமுதற் கடவுளுக்கும் பெருமைதந்து நிற்பது நம் அருமைத் தமிழ்மொழியன்றோ? தமிழின் பெருமையை முற்றக்கூற யாராலாகும்? சுயபாஷை வளர்ச்சி விஷயத்தில் இவர்கள் மிக்க கவனம் செலுத்துவார்களாயின் நம்நாட்டுக்குப் பெரும்பயனுண்டாகும். பாஷாபிமானமானது தேசாபிமானத்தையும் மதாபிமானத்தையும் வளர்ப்பதற்கு இன்றியமையாத்துணையாவதாகும். இவர்கள் தமிழ்வித்துவான்கட்கு நடத்தும் மரியாதை விவரங்களையும் கொடைத்தன்மையையும் பற்றிப் பேசுதற்கு இதுகாலமன்று. மற்றொருமுறை எடுத்துக்கூறுவாம்.

முருகவேள்.

திருக்குறள்—கடவுள் வாழ்த்து.

இவ்வதிகாரத்தின் பொருளைப் பகுத்து நோக்கின், அது நான்கு பிரிவினதாகும். அவையாவன:— க. உலகத்துக்குக் கருத்தா ஒருவன் உளனென்று சாதிப்பது; உ. அக்கருத்தா இனைய குணங்களை யுடையானென்பது; ௩. அவனை வழிபடும் விதம் இனையதென்பது; ச. அவ்வழிபாட்டாலடையும் பயன் இனையதென்பது. இவற்றை முறையே விவரிப்போமாக.

உலகத்துக்குக் கருத்தா உளனென்பதை ஒரு திர்ஷ்டாந்தத்தால் சாதித்தனர். "அகர முதல வெழுத் தெல்லாமாதி, பகவன் முதற்றே யுலகு." எழுத்துக்களெல்லாம் எவ்வாறு அகரத்தை முதலாக உடையனவோ, அவ்வாறே உலகும் தனக்கு நிமித்த காரணனாகிய கர்த்தாவை யுடையது; கர்த்தாவின்றி உலகம் தானாகவே தோன்றித்திதிப்பட்டொடுங்காது; என்று கூறினர். இவ்விஷயத்தைச் சாதித்தற்கு இவ்வுபமானத்தையே சான்றோர் பிறரும் எடுத்தாளுகின்றனர். "அக்கரங்களின் முமகரவுயிரின்றேல், இக்கிரமத்தென்றுமிருக்கு" என்றும், "அக்கரங்கடோறுஞ் சென்றிடுமகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே" என்றும், முறையே சிவஞான போதத்திலும் சிவஞான சித்தியாரிலும் கூறப்பட்டுள்ளது. அகரமாகிய உயிர் இல்லையாயின் ஒழிந்து நின்ற அக்கரங்கள் இல்லையாமாறு போல, ஒன்றாகிய கர்த்தா இல்லையாயின் ஆன்மாக்களுக்கும் சேட்டையில்லையென்றும், இவ்வாறு வேதமே சொல்லும் என்றும் கூறினர். அகரமானது வாய்திறத்தலால் உண்டாதலினானும், இவ்வாய் திறத்தல் மற்ற எல்லா அக்காங்களுக்கும் வேண்டுமாதலினானும், அகரமின்றி அக்கரங்கள் ஆதலில்லை என்றார். ஆயினும் இவ்வுவமையை முற்றுவமையாகக் கொள்ளல் கூடாது. அகரமானது மற்ற அக்கரங்களுக்கு முதலில் நின்று அவற்றோடு ஒருவாறு கலந்து நிற்பினும், அவ்வகரத்தாலே மற்ற அக்கரங்கள் தொழிற்படும் என்றும், அது மற்றவற்றினின்றும் ஜாதி சம்பந்தத்தினாலே வேறுமென்றும் சொல்லக்கூடாதாதலின், இவ்வுவமை ஏகதேசமேயாகும். உயிர் மெய்யாகிய ஒவ்வோரெழுத்திலும் அகரம் கலந்திருத்தல் போல, சிதசித்பிரபஞ்சமாகிய ஒவ்வொரு பொருளினும் கர்த்தா கலந்து நின்று அவர்களைச் சேட்டிப்பன் என்பது பெறப்படும். கர்த்தா அனைத்துக்கும் ஆதியாய் இருப்பினும் தனக்கோர் ஆதியின்றித் தான் அநாதியாயிருப்பரென்றுரைத்தற்கு, ஆதி பகவன் என்று சிறப்பித்தார். உலகமானது தானே தோன்றிச் சேட்டிக்க வல்லதன்றாதலின் உலகத்துக்கு ஒரு கர்த்தா வேண்டும் என்றும், ஆதலின் உலகின் உண்மையால் கருத்தாவின்

உண்மையும் சித்தித்த தென்றும் கூறினர். உலகத்துக்குக் கருத்தா ஒருவன் உண்டென்று நிரூபிக்கக்கூறும் பல விதமான ஏதுக்களில் இது காரண வேது வென்று முதலாகக் கொள்ளப்படுவது. குடத்துக்குக் குயவன் நிமித்த காரணனயிருத்தல் போல உலகத்துக்கு ஆதிபகவன் நிமித்தகாரணனுவான் என்று பெறப்படும். காரணமில்லாமல் காரியம் நிகழும் என்பது நமது அநுபவத்துக்கு முற்றும் விரோதமாயிருத்தலே யன்றி அதனை மனத்தால் எண்ணுதல் கூட நமக்கு அசாத்தியமாயுள்ளது.

"மண்டபமாதிகண்டோர் மயனுளனென்னல்போலும்
குண்டலமுதல்கண்டோர்பொற் கொல்லனுண்டென்னல்போலும்
ஒண்டுகில்கண்டோர்நெய்தோ னெருவனுண்டென்னல்போலும்
அண்டமற்றகண்டஞ் செய்தோனுளனெனவறிவாய்நெஞ்சே.

என்றார் பிறரும்,

இனி அக்கருத்தாவின் குணங்களை எவ்வாறு விவரிக்கின்றனர் என்பதை ஆராய்வோமாக. இக்குணங்கள் அவர் கருத்தாவைக்குறித்துப் பிரயோகித்துள்ள பெயர்களாலே விளங்கும்; ஆதிபகவன், வாலறிவன், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், எண்குணத்தான், தனக்குவமையில்லாதான், பொறிவாயிலைந்தவித்தான், அறவாழியந்தணன், மலர்மிசையேகினான், என்ற பெயர்களைப் பிரயோகித்திருக்கின்றனர். இவற்றால் கருத்தா சர்வக்ஞன் என்றும் சர்வ வல்லமையுள்ளவனென்றும், விருப்புவெறுப்பில்லாத சமபுத்தியை யுடையோனென்றும் எப்பொருட்கும் தலைவனென்றும், எண்குணங்களையுடையானென்றும், தனக்கு நிகரில்லாதவனென்றும், அறத்திற்கு ஆழிபோன்றவனென்றும், அழகிய அருட்டன்மையையுடையானென்றும், அன்பரது இதயகமலத்தில் எழுந்தருளி இருப்பவனென்றும், ஜிதேந்திரியன் என்றும், அவன் குணங்கள் பெறப்படும். எண்குணமாவன:—தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல் பொருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை என்பவைகளாம். ஆதலின் எண்குணத்தான் என்றதனுல் இக்குணங்கள் யாவும் கருத்தாவுக்குப் பெறப்படும். பகவன் என்ற பெயராலும் ஞானம், திரு, வைராக்கியம், புகழ், வீரியம், ஐசுவரியம் என்னும் ஆறுகுணங்களும் சித்திக்கும்.

உலகத்துக்குக்காரணமானவனும் மேலேகூறிய கல்யாணகுணங்களை யுடையோனுமாகிய கருத்தாவை இம்மை மறுமைப்பயன்களையும் முத்தியின்பத்தையும் அடைய விரும்புவோர் யாவரும் வழிபடுதல் இன்றியமையாததென்றும், கல்லாத மூடரினும் கற்றுணர்ந்தபண்டிதர்கள், தாம் உண்

மையை அறிதலானும் தம்மைக்கண்டு பிறரும் செய்தலானும், இவ்வுபாசனையை அவசியம்செய்யவேண்டுமென்றும் தெரிவித்தற்குக், "கற்றதனலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாடொழாரெனின்," என்று கூறினர். வழிபடுதலாவது திருவடிகளை வணங்கித் தொண்டுசெய்தலும், அவன் பொருள் நிறைந்த புகழால் விரும்பி யோதித்துதித்தலும், அவன் திருவடிகளைச் சதா தியானித்தலும், அவன் ஏற்படுத்திய குற்றமற்ற நீதிமார்க்கத்தில் தவறுமல் நின்று அநுஷ்டித்தலும் என்று கூறினர்.

அவ்வழிபாட்டால் அடையும் பயன் இனையது என்பதையும் உடனே கூறினர். அப்பயன்யாதெனில் இருவினைத்தளையில் நீங்கிப் பிறப்பகன்று முத்தியை அடைந்து மனக்கவலைநீங்கியிருத்தல் என்று கூறினர். சருத்தாவை அடைக்கலமாக அடைந்தவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் எவ்விடத்திலும் இடும்பையில்லையென்றனர். இடும்பையும் மனக்கவலையும் தீர்த்தலைவிட ஒருவர்க்குப் பெறவேண்டியபேறு யாதுள்ளது? துன்பத்தாலும் மனக்கவலையாலும் வருந்துவோருக்கு அத்துன்பமும் கவலையும் நீங்குதற்கு உபாயம் இது என்னும் சொல் அவர் செவிக்கு அமுதினும் இனிமை பயக்குமன்றே? கடவுள் வழிபாட்டைக் கைக்கொள்ளுதற்கு இவ்வொரு காரணமே போதுமன்றே? பிறவித்துன்பமும் அதற்குக்காரணமாகிய இருவினைபந்தமும் நீங்கி முத்தியின்பத்தையும் தருவதாயின் இக்கடவுள் வழிபாட்டினும் ஒருவர்க்கு நன்மைபயப்பதும் அத்தியாவசியகமானதும் யாதுள்ளது.

இங்குத் தெய்வப்புலவர் இறைவனைச் சகுணனுகக்கூறினரன்றி நிற்குணனுகக்கூறவில்லை. ஆதலின் இயற்கையில் குணரகிதனு யிருந்தபோதிலும் உயிர்களைப் படைத்துக்காத்து அநுக்ரகிக்கும்பொருட்டுக் குணங்களை இறைவன் கிரகிப்பனென்பது கூறியதாயிற்று. பரமேசுவரன் கருணையினல் அருள்மேனிகொண்டு அநுக்கிரகியாவிடின் அவனையாவர் அறிந்து பெறவல்லார்கள். இவ்வுண்மைபற்றியன்றே

"கரவிலாத பேரன்பினுக் கெளிவருங் கருணைக்
குரவனு ரருளன்றி யிக்கொடிய வெம்பாசம்
புரையில் கேள்வியாற் கழிப்பது புணையினலன்றி
உரவுநீர்க்கடல் கரங்கொடு நீந்துவ தொக்கும்"

என்று பிறரும் கூறினர்.

நிற்க. திருவள்ளுவநாயனர் இவ்வதிகாரத்தில் இறைவனை ஆதிபகவன் முதலிய பொதுப்பெயர்களாற் கூறியதேயன்றி ஒருமதத்துக்குரிய சிறப்புப்பெயரால் கூறவில்லை யாதலின் இவர்மதம் இன்னதென்பது துணியப்படவில்லை யென்று சிலரும், "எண்குணத்தான்" என்றும் "அறவாழி யந்தணன்" என்றும் கூறியிருப்பதனுலே இவர் ஆருகதமதத்தினர் என்று

வேறு சிலரும் கூறுவர். அந்தக்கொள்கைகள் பொருந்தாவென்பதும் இவர் சைவசமயத்தினரே யென்பதும் எமது கொள்கை.

நாயனார்திருக்குறளைப்பற்றி.

"தேவர்குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர்தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

என்று ஔவையார் கூறியிருத்தலால் இக்குறளிற் கூறிய விஷயங்கள் வைதிகதர்மமும் சைவசித்தாந்தமுமே யென்று எளிது உரைக்கத்தக்கது. அங்ஙனமாக நாயனாரை வேதபாஹ்யராகிய சைனமதத்தரென்றல் எவ்வா றொக்கும்? அன்றியும்,

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்."
"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."
"ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்."
"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று."

என்பன முதலாகப் பல விடங்களிலும் வேதத்தையும் வேதியர்களையும் வேதப்ரதி பாதிதமான கர்மங்களையும் விசேஷமாகச் சிறப்பித்திருத்தலினாலே இவர் வைதிக மதத்தினரே யென்பது வெள்ளிடை மலை போல விளங்கும். சைன மதத்தானுக்கு இவ்விஷயங்களைச் சிறப்பித்துக்கூற நிமித்த மேயில்லை. ஆதலின் இவரைச் சைனமதத்தார் என்பார் இவ்விஷயத்தை ஆழ்ந்து யோசியாதவரென்க. இன்னும் இவர்கூறியதாகச் சொல்லப்பட்டுள்ள

"பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருப்ப—நாவின்
இழைநக்கி நூனெருடு மேழை யதிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து."

என்னும் பாடலில்இவர் வைதிகமதத்தரென்பதனோடு சிவத்தியான நிரதரென்பதும் சிவனருட்பேறு பெற்றவரென்பதும் புலப்படும். மேலேகூறிய ஔவையார் பாடலில் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம் என்பன சைவநூல்கள் என்று ப்ரத்தியக்ஷமாகப் புலப்படுதலினாலே இவை ஸ்பஷ்டலிங்கமுடையவை யென்று ஆன்றோர் கூறுவர். இவ்விஷயத்தை ஈண்டு விவரிக்கின் விரியுமாதலின் இத்துடன் நிறுத்துகின்றோம்.

எஸ். முத்துவையர்,
மருவிபட்டணம்.

புத்தகக்குறிப்பு.

விசுவாவஸு வருஷத்திய வாக்கியபஞ்சாங்கம்:—இது முறையூர் ஸ்ரீமாந் பழ. சி. சண்முகஞ் செட்டியாரவர்களால் உலகோபகாரமாக வெளியிடப்பட்டது. சென்னை குஜிலிப் புத்தகவர்த்தகர்களும் ஏனையோர்களும் பிரசுரஞ்செய்து வருகிற பஞ்சாங்கங்களைப் பார்க்கிலும் இதிற் குறித்துள்ள விஷயங்கள் சோதிடர்க்கும் மற்றவர்கட்கும் அவசியம் வேண்டுவனவாய்ப்பலவுள. அவைகள் யாவும் வியக்கத்தக்கனவே. இப்பஞ்சாங்கம் உயர்ந்த பளபளப்பான காகிதத்தில் பிழையின்றிப் பதிப்பித்துப் புத்தகரூபமாய் அமைக்கப்பெற்றுள்ளது. இதை வெளிப்படுத்தியிருக்கிற மேற்குறித்தபிரபு அவர்கட்குயாவரும் நன்றி பாராட்டக்கடமைப்பட்டவர்களே.

அருணசலேஸ்வரர் உண்ணாமுலையம்மை பதிகங்கள், சர்வாலய தீபதரிசனசரித்திரச் சுருக்கம் இவ்விஷயங்களடங்கிய ஒரு சிறு புத்தகம் வரப்பெற்றோம். இவைகளை ஆக்கியோன் திருவெவ்வூரூர் மகா-ா-ா-ஸ்ரீ இராமசாமி செட்டியாரவர்கள். பதிப்பித்துபகரித்தவர் சென்னையில் வசிக்கும் அக்கம்மாள் பேட்டை மகா-ா-ா-ஸ்ரீ மகாதேவ செட்டியாரவர்கள். பதிகங்களின் செய்யுட்கள் சொற்சுவையும் பொருட் சுவையும் நிரம்பவுள்ளன; ஏனைய கத்தியரூப தீபதரிசனச் சுருக்க நடையும் பாராட்டற்பாலதே.

பட்டினத்தடிகள் உடற்கூற்றுவண்ணம், தாயுமானசுவாமிகள் வண்ணம் இவைகளடங்கிய ஒரு சிறு புத்தகமும் பெற்றுளோம். இவ்வண்ணங்களின் பெருமையை யாவருமறிவர். இவைகளை ஒன்றுசேர்த்து நல்ல பதிப்பிலச்சிட்டு வெளிப்படுத்தியவர் அ. ஸ்ரீ மகாதேவசெட்டியார்.

தமிழ் மாது:—இது சென்னைகோமளேசுவரன் பேட்டையிலிருந்து வரும் ஒரு மாதாந்தப்பத்திரிகை. பற்பல நல்ல விஷயங்களை வெளியிடுவது. பெண்களும் படித்தறியுமாறு சுலபமான இனியநடையில் தெளிவாக ஒவ்வொருவிஷயமும் எழுதப்பெறுதலால் நம் நாட்டார் யாவருக்கும் பயன் தருவதேயாம். பத்திராதிபர், கோ. ஸ்வப்பனேசுவரி அம்மாள். இந்த அம்மாள் சர்வஜனமித்திரன், சுதேசி முதலிய பல பத்திரிகைகளுக்கு நெடுநாளாக விஷயதானம் செய்துவருவதை யாவரும் அறிவர். ஓர் இந்தப்பெண்பிள்ளை இவ்வாறு பத்திராதிபராக இருந்து நிர்வகிக்குங்காலம் வந்ததென்பதைக்கண்டு மகிழாதாரும் உண்டோ. ராயல் 28 பக்கங்கொண்ட இதற்கு வருஷசந்தா ரூபா 2. தான். தமிழ்நாட்டார் யாவரும் இதற்குத் துணைபுரிவாராக.

பத்திராதிபர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்.

1. மகா-ள-ள-ஸ்ரீ எம். கே. எம். அப்தல்காதிறு ராவுத்ரவர்கள், இளையான்குடி, மார்ஜி ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டு வரவு } ரூ 25.

வைத்தியம்.

[முன் தொடர்ச்சி]

உபயோகம்:— கெட்ட மாதரிடஞ் சேகரித்த துஷ்டப்பிரமேகம், மதுமேகம், குறியின் முன்பாகமும் உள் சளிச்சவ்வில் காணும் தாபிதமும் நீங்கும். அன்றியும் பித்தகாசம் மேகாதிக்கத்தால் உடல் மிக மெலிந்து காணும் மேலிளைப்பு, ஈளை, இருமல், உஷ்ண மிகுதியாலுண்டாகும் வயிற்று மாந்தம், கிறுகிறுப்பு, நீரிழிவு இவை முதலிய எண்ணில்லாத பயங்கரமான ரோகங்கள் விரைவிற் குணமடைந்து விடும்.

பத்தியம்:—பால், காபி, மாமிசம், புளி, அதிக்காரம், கரப்பான் பதார்த்தம், வெயிலிலுலாவல், பகல் நித்திரை; மாதர் முயக்கம் இவை கூடாதன. மரக்கறிகளில் சுகுணமானதும் எளிதிற் சீரணிக்கும் ஆகாரமுங் கொள்ளவேண்டியது. தைல ஸ்நானத்தன்று இரு வேளை மருந்தை நிறுத்த வேண்டும்.

வல்லாரை மெழுகு.

வல்லாரை சமூலமும் இடித்துப் பிழிந்த சாறுபடி 2, சீதா செங்கழுநீர்ச் சாறு, ஆவிரைச் சாறு, பசுப்பால், பசுநெய், வகைக்குப் படி 1, செவ்விளநீர்ச் சலம் படி 2, இவைகளை ஒரு மண்பாண்டத்தி லூற்றி அடுப்பேற்றிச் சிறுகொதி வரும் வரையும் மெதுவா யெரித்துப் பிறகு அதிமதுரம், கோஷ்டம், செங்கழுநீர்க்கிழங்கு, குன்றிவேர், அவுரிவேர், கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம் வகைக்குக் கழஞ்சு 1, இவற்றைப் பசுப்பாலாலரைத்து மேற்படி கூட்டில் சேர்த்துச் சிறுதீயிட்டு 3 நாள் வரையும் எரித்து அடிக்கடி அடிபற்றுமற் கிளறிக்கொடுத்து 4 ம் நாள் மெழுகுபதமானபோது இறக்கி ஆற்றிவைத்து விதிப்படி விநாயகபூசை செய்து பழகிய நெய்ப் பாண்டத்திலாவது ஜாடியிலாவது நிறைத்துப் பத்திரப்படுத்திக்கொள்ள வேண்டியது.

உட்கொள்ளும் வகை:—பிரதிதினங் காலைவேளை மாத்திரம் கழற்சிக்காயளவு சாப்பிட்டு வரல்வேண்டும்.

தீரும் வியாதி:—க்ஷயரோகிக்குக் காணும் மாலைச்சுரம், காச ரோகியின் மெய்யெரிவு, மூக்கப் பிரமேக ரோகி, அனற்பித்த ரோகி, இவர்க

ளுக்குண்டாகும் உடம்பெரிவு, சதா உடல் வெதும்பிக்கொண்டே தேக மெலிதல், மலச்சிக்கலோடு அன்னஞ் செல்லாமலே கிரமேண உடல்மெலிந்துண்டாகும் பலவீனம், காந்தல் கணையினாலாவது உஷ்ணத்தினாலாவதுண்டாகும் வாய்நாற்றம், தேகநாற்றம், க்ஷயம், நெஞ்சுவலி, ஈளையிருமல் இவைகளெல்லாந் தீரும். மூலரோகியின் அபானக்கடுப்பை விரைவில் குணப்படுத்தி மலத்தைச் சற்று இளக்கி இரத்தப்பெருக்கைக் குறைத்து ஆரோக்கியத்தை யுண்டுபண்ணும். விசேஷ குண மமையப் பெற்றது. தேக மெலிவாளரைச் சீக்கிரந் தேற்றுந் திறமுடையது.

பத்தியம்:—கிரந்தி, மாமிசம், புகையிலை, ஸ்திரீபோகம், உஷ்ணகாரிகள் இவைகளை விலக்கவேண்டியது. சொற்பப் பிணியாளர் அரைமண்டலமும் பெரும்பிணியாளர் ஒரு மண்டலமுஞ் சாப்பிட்டு வரல் வேண்டுல். 8 வயதிற் குட்பட்ட சிறுவர்கள் கணைக்கு அரைக் கழற்சி யளவுகக் கால்மண்டலங் கொள்ள வேண்டியது.

அமுக்கலாங்கிழங்குச் சூரணம்.

மணல் தரையில் முளைத்து வளர்ந்த ஐந்தாறு வருஷஞ்சென்ற அமுக்கலாங்கிழங்கை வேனிற் காலத்தில் பறித்து வந்து மேற்றோலின் மேலேயுள்ள லேசான தோலைக் கத்தியாற் சீவியெறிந்துவிட்டு அதன் கீழுள்ள தடிப்பான தோலை யெடுத்துப் பசுப்பாலிலிட்டு வேகவைத்து நிழலிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் பலம் 10, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல், நெல்லிக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், வாய்விளங்கம், சீரகம், கொத்துமல்லி, சடாமாஞ்சில், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, சிறுநாவற்பூ, இவை வகைக்குப் பலம் 1. மேளு. ஜாலப், சன்னலவங்கப்பட்டை, கோரோசனை வகைக்கு பலம் (வ) இவற்றையுஞ் சூரணித்து முன் சூரணத்தோடு கலந்து பசுப்பால் விட்டுப் பிசைந்து, பாலுஞ் சலமுங் கலந்தூற்றிய பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய வஸ்திரத்தைக் கட்டி அதின் மேல் மருந்தை வைத்து அடுப்பேற்றி மேற்சட்டி கவிழ்த்துச் சிற்றுமுட்டி விரகாலெரித்துப் பதமாய் வெந்தவுடனெடுத்து வெய்யிலிலுலர்த்த வேண்டியது. உலர்ந்த மருந்தை மறுபடியும் இடித்து வஸ்திரகாயஞ் செய்து சூரணத்துக்குச் சமமாய்ச் சீனிச் சர்க்கரை கலந்து வைக்கவேண்டும்.

உட்கொள்ளும் வகை:— வேளைக்கு வெருகடியளவாகத் தனியாகவும் இளவெந்நீரிலிட்டும், பசுநெய்யிற் குழைத்தும், பசுப்பாலிலிட்டுஞ் சாப்பிடலாம்.

தீரும் வியாதிகள்:— அக்கினிமந்தம், பொருமல் வாதம், அன்னத்துவேஷம், செரியாமை, வயிற்றுவலி, உஷ்ணவாயு, மலக்கட்டு முதலிய எண்ணில்லாத ரோகங்கள் குணமாகும்.

கவனிப்பு :— குழந்தைகளுக்குப் புட்டிப் பால் புகட்டுவதாலும், பட்சணங்களாலேயே சதா வயிற்றை நிரப்புவதாலும், சாம்பர், மண், முதலியவற்றைத் தின்று விடுவதாலும், அளவுக்கு மிஞ்சிய ஆகாரத்தை யூட்டுவதாலும் ஜீரண்யகருவிகள் கெட்டு, இரத்தக்ஷீணரோகம், பாண்டு, காமாலை, வயிறு பெருத்தல் முதலிய வியாதிகளேற்பட்டு நாசஞ் செய்வதை யறியாதார் யார்? இவற்றோடு போகாமல் வயிற்றிற் கட்டியு முண்டாய் விடுகிறது. கட்டி யேற்பட்டால் குழந்தை நம்மதன்றென்றெண்ணி விடுவதே தாய்மார்கள் வழக்கம். இவ்வியாதிகளனைத்தையும் இச்சூரணம் போக்கும். அரைவெறு கடியளவு சூரணத்தைப் பசுப்பாலிலிட்டுக் கலந்து கால், அரை மண்டலம் புகட்டிவரவேண்டும். சீரணிக்கும் நல்ல ஆகாரங்களைக் கொடுத்து வருதலே குழந்தைகட்குப் பத்தியம்.

பெரியவர்களுக்குப் பித்த மிகுதியினாலாவது வாயுவினாலாவது அஜீரணங்கண்டு இது காரணமாய்ப் பலபல வியாதிக ளுண்டாகிக் கடைசியில் மலக்கட் டுண்டாய்விடும். மூலரோகத்தாலும் மலக்கட்டுண்டாவது சாதாரணமல்லவா. இவையன்றி யின்னும் எவ்வித காரணங்களினாலாவதுமலக்கட் டுண்டானால் முதலில் உஷ்ணிக்காத இலகுவான பேதி மருந்தை யெடுத்துக்கொண்டு பிறகு ஒரு மண்டலம் இச்சூரணத்தைக் காலைமாலை கொஞ்சம் இளவெந்நீரிற் கலந்து சாப்பிட்டு வரின் மலக்கட்டொழிவதோடு அறமெலிந்த தேகமும் மிகப் பலமடைந்து தாதுவிருத்தியும் தேக காந்தியு முடையவர்க ளாய்விடுவார்கள். கரப்பான் பதார்த்தம் நீக்கிவிடவேண்டியது.

பித்தசோகை, சுரத்தின்பின் காணும் ஒருவகைவீக்கம், அக்கினிமாந்தியம், காந்தல், நெஞ்சுவலி, மார்பில் வாயுக்குத்தல், வயிற்றுப் பொருமலால் காணும் இளைப்பு, சரீரவலி, இவை முதலிய ரோகங்களுக்குச் சூரணத்தைத் தனியாகவே மண்டலம் வரை சாப்பிட்டாற் குணமாய்விடும்.

வயிற்றுப் போக்கு, சீதரத்தக் கழிச்சல், கிராணி முதலிய வயிற்றுப் போக்கு ரோகிகட்கும் கர்ப்பிணிகளுக்கும் இம் மருந்தைக் கொடுக்கக்கூடாது.

கரப்பான், சொறி, சிரங்கு, படர்தாமரை, புண்கள் முதலிய யாவுஞ் சொஸ்தமாகும். சமயோசிதமாய் இன்னும் அனேகரோகங்கட்குக் கொடுத்துக் குணங் காணலாம்.

[இன்னும் வரும்.]

வீ. சா. ஐயன்பிள்ளை,
இந்துவைத்தியர், காட்டம்பட்டி, நெகமம் போஸ்டு,
பொள்ளாச்சித்தாலுகா.

சைவ பரிபாஷை.

[முன் தொடர்ச்சி]

சுவரூபாசித்தம், பாகாசித்தம், ஆசிரயாசித்தம், விசேஷணுசித்தம், விசேஷியாசித்தம், உபயாசித்தம், ஏதுவஞ்ஞாநுசித்தம், அதிகரணுசித்தம், அந்நியதாராசித்தம், வியாப்பியத்துவாசித்தம், எனப்பத்துவிதமாகும்.

அதில் வியாப்பியத்துவாசித்தம் இரண்டுவிதம். வியாப்தியையறிவிக்கும் பிரமாணமில்லாததொன்று, உபாதி யுள்ளதொன்று. ஆக இரண்டுகூடி மொத்தம் அசித்தம் பதினொன்று.

அவற்றுள் சுவரூபாசித்தம் எப்படியென்னில் கடம் முதலானவை பரிமாண ரூபங்களாகும் நித்தியமாதலால் பாஞ்சராத்திரி மதத்தில் ஆத்மாவைப்போல என்னுமிடத்தில் உபயவாதிகளுக்குஞ் சம்மதமாய் நித்தியமாகிய கடத்தில் நித்தியத்வ ஏது சுவரூபமேயில்லாமையால் சுவரூபாசித்தம். பின்னும் சத்தம் நித்தியம் கண்ணிற்கு விஷயமாதலால் என்னுமிடத்தும் அப்படியே சுவரூபாசித்தம்.

பாகாசித்தமாவது:—சீவன் தேகம் இரண்டும் அநித்தியம். காரியமாதலால் கடம்போல, என்னுமிடத்து காரியத்துவ ஏதுவானது பக்ஷமாகிய சீவதேக மிரண்டிலொன்றான சீவனில் அசித்தமானதால் ஒருபாகம்சித்தம்.

ஆசிரயாசித்தமாவது:—ஆகாசத்தாமரை வாசனையுள்ளது. தாமரைத்தன்மையால் குளத்திற்றாமரைபோல, என்னும் இவ்விடத்தில் ஆசிரயமாகிய ஆகாசத்தாமரையே யில்லையாகையால் அது ஆசிரயாசித்தம்.

விசேஷணுசித்தமாவது:—சத்தம் நித்தியம் கண்ணுக்குத் தெரியுங்குணமாதலால் ரூபத்தைப்போல இவ்விடத்துக்கண்ணுக்குத் தெரியுமென்னும் ஏது விசேஷணம் அசித்தமாதலால் இது விசேஷணுசித்தம்.

விசேஷியாசித்தமாவது:—சத்தியம், நித்தியம், அறிவுக்கு விசேஷியமாகிய திரவியமாதலால் கடத்தைப்பொல விசேஷியமான திரவியத்தன்மை சத்தத்தில் அசித்தமானதால் இது விசேஷியாசித்தம்.

உபயாசித்தமாவது:— கடமநித்தியம். குணமாயும் இந்திரிய விஷயமாகாமலுமிருப்பதால் இவ்விடத்து விசேஷணமாகிய குணத்தன்மையும் விசேஷியமாகிய இந்திரிய விஷயமாகாமையும் கடத்திலில்லாமையால் இஃது உபயாசித்தம்.

வத்துவஞ்ஞானசித்தமாவது:—தேவதத்தன் பருதனமுள்ளவன். அதற்கேதுவான அதிர்ஷ்டமுடைமையால் யஞ்ஞதத்தனைப்போல. இவ்விடத்து அதிர்ஷ்டமுடைமை யெனுன்மேது நமக்குத்தெரியாதாதலால் இது வ்த்துவஞ்ஞானசித்தம்.

அதிகர்ணுஞ்ஞானசித்தமாவது:—இப்போதிந்த ஆகாசத்திலிருக்கும். பரமாணுவானது ஒருவேளை திரவியத்தையுண்டாக்கும். பரமாணுவாதலால் கடத்தையுண்டாக்கும் பரமாணுப்போல் இவ்விடத்து அதிகரணமான ஆகாசத்திலிருக்கும் பரமாணு தெரியாதாகையால் இஃது அதிகர்ணுஞ்ஞானசித்தம்.

அந்நியதராசித்தமாவது:—சத்தம் அநித்தியம், செய்யப்படுவதால் கடத்தைப்போல இவ்விடத்து அந்நியாதரமான மீமாம்ஸக மதத்தில் செய்யப்படுவதென்னும் ஏது சத்தத்தில் அசித்தமாதலால் இது அன்னியதராசித்தம்.

வியாப்பியத்துவாசித்தமாவது:—எல்லாம் க்ஷணமிருக்கும் சத்தாகையால் நீர்க்குமிழிபோல இவ்விடத்திய சாத்திய ஏதுக்களுக்கு வியாப்தியைறியவிக்கும் பிரமாணமின்மையால் இது வியாப்பியத்துவாசித்தம்.

உபாதியுள்ள வியாப்பியத்துவா சித்தமாவது:—கர்ப்பத்திலிருப்பவன் கறுப்பன். மித்திரையின்பிள்ளையாதலால் முன்பிறந்த மித்திரையின்பிள்ளைபோல இவ்விடத்துக்காணக்கூடாத

சாகமுதலான ஆகாரத்தின் பரிணாமவிசேஷமாகிய உபாதியிருப்பதால் இது உபாதியுள்ள வியாபபியத்துவாசித்தம்.

மேல் விருத்தவேதுவாபாச விலக்கணமாவது:—சாத்திய விரோதியோடாவது சாதன விரோதியோடாவது சம்பந்தப் பட்டிருப்பது விருத்தம். அதாவது சாத்திய விரோதியோடு வியாப்தியுள்ள எதுவொன்று சாதனவிரோதியோடு வியாப்தியுள்ள சாத்தியமொன்று.

அஃதெங்ஙனமெனில் சத்தம் அநித்தியம் காரியமாதலால் ஆகாசத்தைப்போல இவ்விடத்துக் காரியவேது தன் சாத்திய விரோதியான அநித்தியத்தோடு வியாப்தியுள்ளது. இது சாத்தியவிரோதியோடு வியாப்தியுள்ளவேது.

மனது அநித்தியம். சேதனமானதால் ஆத்மாவைப்போல இவ்விடத்து அநித்தியமாகிய சாத்தியமானது தன் சாதனவிரோதியான அசேனத்தோடு வியாப்தியுள்ளது. இது சாதன விரோதியோடு வியாப்தி யுள்ள சாத்தியம். இவ்விரண்டும் விருத்தவேதுவாபாச மென்னப்படும்.

மேல் அநேகாந்திகர்.

அது வியபிசாரத்தோடு கூடியிருப்பதால் ஸவியபிசார மென்னப்படும். அஃது இரண்டுவிதம். சாதாரணாநேகாந்திகன், அசாதாரணாநேகாந்திகன் என்பன.

சாதாரணாநே காந்திகனவது:—ஆத்மா நித்தியம், பிரமேய மாதலால் என்னுமிடத்து பிரமேயத்துவ எதுபக்ஷமாகிய ஆத்மாவிலும், சபக்ஷமாகிய மாயையிலும், விபக்ஷமாகிய குடமுதலானவற்றிலுமிருக்கிறது.

அசாதாரணாநே காந்திகனவது:—பூமி நித்தியம். கந்தமுடைமையால். இவ்விடத்துக் கந்தமுடைமையென்னும் எதுவானது சபக்ஷமாகிய ஆத்மாவிலும், விபக்ஷமாகிய ஜலமுதலானவற்றிலும் மின்றி பக்ஷமாத்திரமான பூமியிலிருக்கின்றது.

மேல் அநந்தியவசிதன்.

அஃதாவது சாத்திய நிச்சயத்தைத் யுண்டாக்காதஹேது வாகும். எப்படியென்னில், பிரபஞ்சம் எப்பொழுது முள்ள வஸ்துவாதலால், என்னுமிடத்து வஸ்துத்துவ ஹேதுவானது தனது சாத்தியமான எப்பொழுதுமிருப்பை நிச்சயிக்கமாட்டாது.

மேல் கலாதீதன்.

அஃதாவது ஸலமான மற்றொரு பிரமாணத்தால் பாதிக்கப்பட்டஹேது. இது கலாதீதன் பாதிதவிஷயம் என்று சொல்லப்படும். அது பிரமாணங்களின் பேதத்தால் ஐந்துவிதமாகும். அவற்றுள் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் பாதிக்கப்பட்டதெப்படி யென்னில் அக்கினி உஷ்ணமன்று, பதார்த்தமாதலால் என்பது. அநுமானத்தால் பாதிக்கப்பட்டதாவது சகல காரியமும் உபாதான காரணமற்றது ஆகந்துகமாதலால் என்பது. ஆகமத்தால் பாதிக்கப்பட்டதாவது யாகமுதலானவை சுவர்க்க சாதகங்களல்ல, செய்கையாதலால் வீண்செய்கை போல என்பது. அர்த்தாபட்டியால் பாதிக்கப்பட்டதாவது நூறுவயதுள்ள தேவதத்தன் வீட்டிலுமில்லை வெளியிலுமில்லை பிரத்தியக்ஷமாகக் காணப்படாமையால் என்பது. இப்படியே இவற்றிற்குப்பௌஷ்கர வசனப்பிரமாண மிருக்கின்றது.

சிலர் அனத்தியவசிதன் என்பது அனைகாந்திகனில் அடங்குமென்பர். அவர்பக்ஷத்தில் ஐந்தாவது ஹேதுவாபாசன் பிரகரண சமனென்பதாகும் ஆதலால். எந்த ஹேதுவுக்குச் சாத்தியாபாவத்தைச் சாதிக்கின்றது சரியான பலமுள்ள மற்றொருஹேது இருக்கின்றதோ அது. சத்பிரதிபக்ஷன் பிரகரணசமன் என்னப்படும். அதெப்படியென்னில் சப்தம் நித்தியம் பாதகப் பிரமாண மின்மையால் சப்தம் அநித்தியம் சாதகப் பிரமாணமின்மையால்.

மேல் பக்ஷா பாசன்:— அது நான்கு விதமாகும்.

[தொடரும்.]